www.tamilarangam.net

SARVADESA TAMILER

# சர்வதேசதமிழர்



## தமிழகச் சிறப்பிதழ்

சிறப்பாசிரியர்கள்
திருமதி விஜயலட்சுமி மாசிலாமணி
டாக்டர் வ.மாசிலாமணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேச தமிழர் களம்:

**இனிய நண்பா,**

சர்வதேச தமிழர் இதழ் உலகத்தமிழனுக்கு குரல்கொடுக்கிறது. சர்வதேசதமிழர் இதழ்மூலம் உலகத்தமிழன் உள்ளத்தை தொட்ட, என் உள்ளத்தைக் கவர்ந்த இனிய நண்பரே நீர்,வாழ்க பல்லாண்டு!

**இரா.சனார்த்தனம்,உலகத்தமிழர்பேரவை,7 மாண்டியச் சந்து,சென்னை-8 (தொ.பே.8266888)**

**அன்புஆசிரியநண்ப,**

சுவிஸ்,ஜேர்மனி,டென்மார்க் வந்து தமிழ்எழுச்சிவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தோம்.23.08.97 பேர்ண் நகரில் ஓவியக்கண்காட்சியை திராவிடர்கழக தலைவர் கி.வீரமணி திறந்துவைத்தார்.ம.மனோகரன் தலைமையில்.பொ. முருகவேள் வரவேற்புரை ஆற்றினார்.என் உரையில், 25ஆண்டுகாலம் உலகதமிழர்பண்பாட்டுக்கழகம் ஆற்றிய பணிகள்,நடத்தியமாநாடுகள்,பண்பாடு–ஒற்றுமை நோக்கு பற்றி கூறினேன்.பின் உ.த.ப.க. ஐரோப்பியபொறுப்பாளர் கே.ரி.கணேசலிங்கம்,ஜேர்மன்கிளை தலைவர்:கமலநாதன்,தனபாலசிங்கம்,பிரான்ஸ்:பேராசிரியர் சக்திப்புயல்,கீழ்கரவை பொன்னையன் உரையாற்றினர்.கவியரங்கில் விவேகானந்தன்,தமிழ்குமரன் உட்பட பலகவிஞர்கள் பங்கேற்றனர். த.வி.பு.சுவிஸ் பொறுப்பாளர்:ந.முரளிதரன் ஈழத்தமிழர் பிரச்சனையில் தமிழகமக்கள்,கட்சிகள் பங்கு முக்கியம்!என் றார்.உ.த.பேரவை தலைவர் இரா.சனார்த்தனம்,30 ஆண்டு இலங்கைத்தமிழர் பிரச்சனையில் தம்ஈடுபாட்டையும், பலலட்சம் ஈழஅகதிகள் அவதியையும் விளக்கினார்.திராவிடர்கழகதலைவர் கி.வீரமணி, தி.க.வின் ஈழதமிழர் பிரச்சனையில் முற்றுமுழுதான ஈடுபாடு,தமிழ்பண்பாடு காத்தல் முக்கியம்பற்றி பேசினார்.தமிழக ஈழச்செல்வி, ரஜினி புலேந்திரன் நடனம்,சிவத்தின் பண்டாரவன்னியன் நாடகம்,யாழ்.நாச்சிமார்கோவிலடி ராஜன் குழு வில்லுப் பாட்டு நடைபெற்றன. திருமதி.வைஜயந்திமாலா குணசீலன் நிகழ்ச்சியை தொகுத்தளித்தார்.
30.09.97ல் ஜேர்மனியில் எழுச்சி தமிழ்விழா எம்.கே.பாலமுரளி,கே.பி.செல்வநாயகம் நாதசுரம், கி.வீரமணி, இரா. சனார்த்தனம் சிறப்புரை,ஈழசெல்வி நடனம்,பிறீமன் தமிழ்கலைமன்றம் நாடகம்,நகைச்சுவை நாடகம்,கோலாட்டத் துடன்,புலவர்பட்டம்பெற்ற ஐவர்க்கு என்னால் பட்டம் வழங்கப்பட்டது.தலைமையுரை.நாசி.கமலநாதன்,சிறப்புரை கே.ரி.கணேசலிங்கம், நிகழ்ச்சி தொகுப்பு:என்.ரி.ஜெகன் ஆவர். தமிழ் பரவும் உங்கள் பெரும்பணிக்கு நன்றி!

**பேராசிரியர்இர-ந-வீரப்பன்,தலைவர்,உலகத்தமிழ்ப்பண்பாட்டுகழகம்,மலேசியா**

**அன்புடையீர்,**

சர்வதேசதமிழர் சஞ்சிகையை படித்து மகிழ்ந்தேன்.இம்முயற்சி வரவேற்கத்தக்கதாயும்,மிகவும் திறம்பட்ட வெளியீடாகவும் இருப்பதை அறிந்து பாராட்டுகிறேன். சந்தாதாரராகவும் விரும்புகிறேன்.சர்வதேச தகவல் சேவையில் வெளியான உலகநாட்டுஉல்லாசவழிகாட்டல்கள் விபரம்,அடங்கிய தகவல்தொகுப்பை,அனுப்பியுதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்!......................................................**ச.சச்சிதானந்தம்,பீஜி**

(தகவல்,அனுப்பப்பட்டுள்ளது!தாங்கள்,பிஜியின் இணைப்பாளராகி சிறப்பிதழ்ஒன்றையும் தயார்செய்துதவுக! ஆர்)

**பேரன்புதகையீர்,**

நலம்,நலம் மலர்க! நல்லன விளைக! தாங்கள் மனமுவந்து அன்புடன் அனுப்பிய சர்வதேசதமிழர் இதழ் கிடைக்கப்பெற்றேன். என் இனிய நண்பர் சென்னைப்பல்கலைக்கழக முனைவர் திரு.கோபாலா கிருஷ்ணன் அண்மையில் ஐரோப்பாவுக்கு உரைநிகழ்த்த வந்தபோது,சிறப்பாக நிகழ்ச்சிகள் நடந்ததாயும்,அவருக்கு அளிக்க ப்பட்ட வரவேற்பையும்,உபசரிப்பையும்–புலம்பெயர்ந்துவாழும் நம்தமிழர்களின் அன்பையும் நமக்கு விரிவாக எழுதியிருந்தார்.அவரது அறிமுகத்தால் சர்வதேசதமிழர் எனக்கு அறிமுகமானது குறித்து வியந்தேன்.சிரமம் பாராது இதழ் அனுப்பியமைக்கு என் நன்றியும், வணக்கமும் உரித்தாகுக!
நாடும்நடப்பும்,ஆசிரியர்கருத்து,சிந்தனைதடாகம்,சர்வதேசநடப்புகள்,நேர்முகபேட்டிகள் தமிழ்சமுதாயம் ஆழ்ந்து, அகழ்ந்து சிந்திக்க வேண்டியவையாகும். சர்வதேசதமிழர்.புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களின் குரலாக, எண்ண மாகஇருக்கிறது. வாழ்க!வளர்க தங்கள் தமிழ்ப்பணி!......................................**எஸ்.கிருஷ்ணன்,சிங்கப்பூர்**

(சிங்கப்பூர் பிரதிநிதியாக,சிங்கப்பூர் சிறப்பிதழ் ஒன்றை தயார்செய்துதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்!ஆ–ர்)

**ஆசிரியருக்கு,**

கடந்த இதழில் வெளியான சமையல்குறிப்புகள் மிகவும் தரமானவை.தொடர்ந்தும் இதுபோல் வரவேண்டும், என எதிர்பார்க்கிறோம்.நோர்வே வெளிநாட்டமைச்சின் செயலாளரை பேட்டி கண்டு,இலங்கையில் நடக்கும் கொடுமைகளை தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறியமை மிகவும் பாராட்டப்படக்கூடியவை! ஒஸ்லோ ரமேஷ் எழுதிய ஆசிரியர் கடிதம் மிகவும் வேதனையானது! எங்கே வழிப்போக்கனைக் காணோம்? வழியில் சற்று இளைப்பாறுகிறார் போலும்!......................................**திருமதி.ச.அற்புதம்,ட்றம்மன்,நோர்வே**

**அன்பு ஆசிரியநண்ப,**

1998 தையில் சர்வதேசதமிழர் பாரிஸ் சிறப்புமலர் வெளியிடுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்கிறேன். சிறப்பா க அமையவேண்டும்! என்பதே என்அவா! ஆவல் நிறைவேற இறைவனை வேண்டுகின்றேன். 14–15.09ல் பாரிசில் ஐரோப்பிய இலக்கியசந்திப்பு நடந்ததுபற்றி பின் எழுதுவேன்.**பீ.எஸ்.பற்குணராசா,பாரீஸ்,பிரான்ஸ்**

**ஆசிரியர் அவர்கட்கு,**

தமிழீழத்தில் எம்இனத்துக்கெதிராக 1995–96–97ல் தொடர்ந்த பாரியஇராணுவநடவடிக்கையால் பலலட்சம்மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.பொருளாதாரத்தடை,கடல்வலயதடை,உணவுத்தடை,மருந்துகள்தடை, வெளிநாட்டுஉதவி நிறுவனதடை,விமானகுண்டுவீச்சால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர்புனர்வாழ்வுகழகமே அயராதுஉதவுகிறது நோர்வேயில் நிதிசேகரிப்பு:03.10.97–12.10.97காலப்பகுதியில் நடைபெறும்.துயர்துடைப்புபணியில் ஒன்றிணைவோம். எமது ஒருநாள் ஊதியம் ஒருமழலையின் மறுவாழ்வு! சகலதமிழரும் உதவுக!

..................**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,த.பெ.4742,சோபியன்பேக்,ஒஸ்லோ-5, (தொ.பே.22717537)**

ஓவியம்:திருமதி.பா.தங்கம்

**தமிழர்களை முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச் சஞ்சிகை**

**சர்வதேச தமிழர்:1997 தொ.4 இல.7-8**

## ஆசிரியர்கருத்து:தமிழர்களும் தமிழகமும்

செந்தமிழ்நாடெனும் போதினிலே-இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே...என்ற பாடல் இன்னமும் நம்மனதில் இனிக்கத்தான் செய்கிறது. தமிழகத்துடன் உலகத்தமிழர்க்கு உள்ளதொடர்பு உண்மையிலேயே மிக மிக ஆழமானது.வரலாற்றுப்பிரசித்தி பெற்றது. யாராலும் மறுக்கவோ,மறைக்கவோ,மறக்கவோமுடியாதது! தமிழகம் பல்லின,பலமாநில மக்களின் வீடாக இருப்பினும் தமிழகத்தின் மொழி,கலாசாரம், தனித்துவம்,தலைமை, தனிக்குரல்,மங்காது விளங்க சகலரும் பெருந்தன்மையுடன் ஒத்துழைக்கவேண்டும்.

வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடே!, யாதும் ஊரே யாவரும் கேளிர்!! எனும் சமத்துவ,பெருந்தன்மைக்கோட்பாட்டை எவரும் பிழையாக அர்த்தம்பண்ணிக் கொள்ளக் கூடாது.தமிழ்,தமிழர்,தமிழ்நாட்டுக்குரிய மதிப்பை,நட்புறவை வழங்கல் தமிழகத்தில் வாழும் வேற்றுஇன மக்களின் முக்கியகடமை! தமிழகத்தில் எவ்வாறு வேற்று இனமக்கள் மதிப்புடன்,பெருந்தன்மையுடன்,பாதுகாப்புடன் நட்புறவுடன் நடத்தப்படுகிறார்களோ,அதே போல வெளிமாநிலத்தில் வாழும்,தமிழர்களுக்கும் உரிய மரியாதை,பெருந்தன்மை,பாதுகாப்பு,நட்புறவு கிட்டவேண்டும். பொருளாதாரநிலை,மற்றும் புறக்காரணங்கள் கருதி தமிழர்கள் பிறமாநிலங்களில்(உ.ம்:கர்நாடகா,கேரளா,மகராஷ்டிரா,பஞ்சாப்,ஒரிசா,ஆந்திரா)தொழிலாளராக செல்கையில் அவர்களை அடிமையாக நடத்துவது,தாக்குதல்நடத்தல்,கொலை,கொள்ளை,வீடெரிப்பு,கற்பழிப்பு, மிரட்டுதல்,மதிப்பீனமாக நடத்துவது,பாகுபாடு காட்டுவது தவிர்க்கப்பட மத்திய,மாநிலஅரசுகள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.அன்றேல் இந்தியாவின் ஒற்றுமை சிதறி மாநிலங்கள் தனிநாடுகளாகலாம்.

காவிரிநீர்ப்பங்கீடு போன்ற பிரச்சனைகளில் மத்தியஅரசு நழுவிக்கொள்ளாமல் நீதி சகலர்க்கும் கிடைக்க ஆவன செய்யவேண்டும். அதிகாரங்களை மத்தியில்குவித்து சனத்தொகையில் 35 வீதமான இந்திக்காரர்களைத் திருப்திப்படுத்தி 65வீதமான ஏனையோரை ஏமாற்றமுயலாமல், பிரிட்டனில் ஸ்கொட்டிஷ் ,வேல்ஸ் பாராளுமன்றுகள் அமைவதுபோல் அதிகஅதிகாரம்,அதிகவளர்ச்சி,திறந்த பொருளாதாரம்,என நவீன முறையில் மத்தியஅரசு சிந்திப்பது தமிழகத்துக்கு மட்டுமன்றி சகல மாநிலவளர்ச்சிக்கும் உதவுவதாக இருக்கும்.

தமிழகஅரசியல்கட்சிகள்,அமைப்புகள் 21ம் நூற்றாண்டில் சுத்தமான,சூழல்பாதுகாப்பான, ஊழலற்ற,சாதிச்சண்டையற்ற,உயர்ந்தகலை-கல்வியுணர்வுள்ள,தமிழ்ப்பற்றுள்ள,மதிப்பு,வலிமை,சிறப்புமிக்க தமிழகத்தை காண்போமாக!

## சிறப்பாசிரியர்கள் கருத்து:

பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் தமிழினம் வளர்ந்து வருகிறது, என்பது மட்டுமல்ல. உலகில் எல்லா மூலை முடுக்கிலும் உயர் மட்ட நிலையிலும் தமிழ் நாகரிகம் பரவியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. வாணிகம் காரணமாக, உயர் பதவி காரணமாகப் பலர் சென்றிருக்கிறார்கள் என்ற அளவில் பெருமை; புலம் பெயர்ந்த மக்களாக – தேங்காய்ச் சிதறலாக – இன்னும் பலர் சென்றிருப்பது இதயத்தை இறுக்கும் வேதனை.

ஒரு வகையில் யூதர்களின் நிலைக்குத் தமிழர்களை ஒப்பிடலாம். யூதர்கள் போலவே, தமிழர்களும் ஆழ்ந்த மதநம்பிக்கை, பாரம்பரிய பெருமிதம், கட்டுக்கோப்பு எங்கு சென்றாலும் கலாச்சாரம் காக்கும் கவனம் இதெல்லாம் விட கூர்த்தமதி கொண்டவர்கள்.

இன்றைய நிலையில் உலகளாவிய சிந்தனைப் போக்கில் பெரும் மாற்றம் செய்தவர்கள் மோஸஸ், ஜீஸஸ், ஐன்ஸ்டீன், கார்ல் மார்க்ஸ், சிட்மண்ட் பிராய்ட் என்றால் இவர்கள் அனைவருமே யூதர்கள்தாம்.

இதேபோல தமிழரைப் பற்றி ஒரு காலத்தில் உலகம் பெருமிதப்படும்.

உலகளாவிய தமிழரை இணைக்கும் பணியில் தளரா முயற்சி கொண்டுள்ள 'சர்வ தேசத் தமிழர்' திரு பிரபு. இந்த இதழை தமிழ் நாட்டுக்குச் சிறப்பிதழாக்க கொணர வேண்டினார். அவர் ஊக்கமும் உற்சாகமுமே இவ்விதழுக்குக் காரணம்.

இவ்விதழில் தமிழ்நாட்டுச் சுற்றுலா பற்றி நண்பர் பாஸ்கரனும், இசையே தமிழின் மூச்சு என்று திருமதி விஜயலட்சுமி மாசிலாமணியும், இரு சிறுகதைகளும், கவிதைகள் பலவும் வந்துள்ளன. சிறந்த தமிழர் பற்றி ஒரு தொகுப்பும் உள்ளது.

தொடர்ந்து பல வெளிநாட்டுச் சிறப்பிதழாக சர்வதேச தமிழர் வரும். திரு பிரபுவின் முயற்சி அரியது; பெரியது; வளர வாழ்த்துக்கள்!

இம்முயற்சிக்குப் பலவகையிலும் துணை நின்ற திரு மனோகரன், திரு சத்தியானந்தம் அனைவருக்கும், மிக்க நன்றி.


காஞ்சிபுரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய தமிழகம் - குதிரை வேகக் கண்ணோட்டம்

வ. மாசிலாமணி

## பொருளாதாரத்தில்

பரவாயில்லை. கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் சுதந்தர இந்தியாவில் இப்போதுதான் கொஞ்சம் பசுமை எல்லாப் பக்கமும் பரவியிருக்கிறது. வெளிநாடுகளின் நுழைவு - சென்னையிலேயே மூன்று கார் உற்பத்தி நிறுவனங்கள் - இப்போதைய கம்ப்யூட்டர் காய்ச்சலில் தமிழகம் முக்கிய பங்கு.

## அரசியல்

பரவாயில்லை. கடந்த சில ஐந்தாண்டுகளில் கசப்பான அனுபவத்தின்பின் நல்ல மாற்றம். ஆனால் தொடருமா? கலைஞர் இப்போதாவது மக்களை ஏமாற்றாமல் இருப்பாரா என்ற ஏக்கம். போலீஸ் தர்பாரும், ஊழலும் பொருமிக் கொண்டும் (இருமிக் கொண்டும்) குமுறிக் கொண்டும் இருந்தாலும் - ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ளனர். தெற்கு மாவட்டங்களில் அண்மையில் ஜாதிச்சண்டை. இன்னும் இன்னும் இன்னுமா ஜாதி மதச் சண்டை. கேவலம்.

சுப்ரமணியசாமியும் வை.கோவும் ஜெயும் இப்போது புதுக்கூட்டணி. சாமி கழைக் கூத்தாடியாகி விட்டார். ஒரு அமெரிக்க யுனிவர்சிடி பேராசிரியருக்கு இது அழகா?

## சினிமா

அடிதடி, நொறுக்கல், காரை - சேரை உடைத்தல், கற்பழிப்பு இது நிஜம். இயக்குநர்களைத் தொழிலாளர்கள் யூனியன் துவம்சம். (கேமரா இல்லாமல்) சினிமா உலகம் ஸ்தம்பித்து விட்டிருக்கிறது. பெரும்பாலான சினிமா கலைஞர்கள் கதை: இருந்தால் நவாப்ஷா இல்லாவிட்டால் பக்கிரிஷா. இப்போது இரண்டாவது நிலை.

சின்னத் திரையில் (TV) நிறைய நல்ல தொடர்கள். நல்ல இயக்குநர்கள் புது நடிகர்கள் பரிணாமம்.

## கலை இலக்கியம்

இது எப்போதும் போல சிறப்பாக உள்ளது. தொடர்ந்து இசை, நாட்டியம் பல அரங்குகளில் சின்னதாய் பெரியதாய். இந்த நாடகங்கள் கடி ஜோக்ஸ்சும், slap-stick காமெடியும் விட்டு முன்னேறவே முன்னேறாதா? இன்றைய நிலையில் நிறைய பத்திரிகைகள், வார இதழ்கள் மாத இதழ்கள் தமிழில் வருகின்றன.

தமிழ்ச் சினிமாக்கள் போலவே பெரும் பான்மை.யானவை 'மசாலா'. கதை, சினிமா, அரசியல், ஆன்மீகம் இந்த நான்கையும் வெவ்வேறு விகிதத்தில் கலந்து தாளித்த மசாலா. தரமான இலக்கியத் தரம் உள்ள பத்திரிக்கை, வெளியே தெரிவது கூட இல்லை. 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில் tight rope walking. எத்தனையோ பெரிய எழுத்தாளர்கள் இருந்தும் பெரிய (great) இலக்கியம் தமிழில் இன்னும் வரவில்லையே ஏன்?

## ஆன்மீகம்

நிறைய கோவில்கள், நிறைய பூசைகள் கும்பாபிஷேகம், அண்மையில் தஞ்சைப் பெரிய கோவில் யாகம் எல்லாம் நிறைய. இது தவிர, வருஷம் ஒரு சாமியார் அவதாரம் செய்து கொண்டிருக்கிறார். லேடஸ்ட் கல்கி. விஷ்ணுவின் பத்தாவது அவதாரம். கஷ்டங்கள் கவலைகள் எல்லாம் போய் போயே விட்டன. ஆஸ்பத்திரிகளையும் ரேஷன் கடைகளையும் மூடப் போகிறார்கள்.

## கல்வி

நல்ல நிலை. பாராட்டத் தக்க நிலை. இந்தியா முழுமையும் உள்ள கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் நிலை முதலிய கணக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகம் நிச்சயம் பெருமைப் படத் தக்க நிலைதான். ஊழல் இல்லை என்பதில்லை. Tolerable.

அண்மையில் மருத்துவ, எஞ்சினீரியர் படிப்புக்கு முறையான அனுமதி. வரவிருக்கும் Science city, Informatics city எல்லாம் தமிழ் நாட்டின் தரம் உயர்த்தும் இன்று உலகெங்கும் softwareக்கும் Informaticsக்கும் பெரும் நாட்டம். இதில் தமிழ் நாடு நல்ல முன்னேற்றம் காட்டி வருகிறது.

அமெரிக்க சிலிகான் பள்ளத்தாக்கு Los Angeles அல்லது San Franscicoவில் வேகமாக நடந்தால் ஐந்து நிமிடத்தில் யார் மீதாவது மோதி விடுவீர்கள். "கண்ணு தெரியலை?" என்ற வார்த்தைகள் காதில் மோதினால் வியப்பில்லை.

***இதுதான் இன்றைய தமிழகநிலையாகும்!***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எழில்மிகு தமிழ்நாடு காண வாரீர்!

**—மாயூரம் சுப்ரமணியன் பாஸ்கரன்**

இந்தியா ஒரு புராதன நாடு. இதன் பழம் பெரு நகரங்களும், அரண்மனைகளும், கோட்டைகளும், கோயில்களும், மாதா கோயில்களும், மசூதிகளும், புத்த/ஜெயின் விகார்களும், அழகிய கடற்கரைகளும், இந்தியாவில் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் பிரதிபலிக்கின்றன. 1991 கணக்கெடுப்பின்படி இந்த புண்ணிய பூமியின் மக்கள் தொகை 846.3 மில்லியன். சுமார் 1652 மொழிகள் பேசப்படுகின்றன. வடக்கில் தலைநகர் டெல்லி, ஆக்ரா, பரத்பூர், சண்டிகர், ஹரித்துவார், ஜெய்ப்பூர், குலு, மணலி, லக்னோ, முசௌரி, நைனிடால், சிம்லா, அலகாபாத், வாரணாசி மேற்கில் பம்பாய், கோவா, குவாலியர், கஜுராஹோ, சாஞ்சி, உதய்ப்பூர்-கிழக்கில் கல்கத்தா, புவனேஸ்வர், புத்தகயா, டார்ஜிலிங், கொனாரக், பூரி – தெற்கில் சென்னை, பெங்களூர், கொச்சின், ஹைதராபாத், கொடைக்கானல், கோவளம், மைசூர், மதுரை, மகாபலிபுரம், உதகமண்டலம், பாண்டிச்சேரி மற்றும் பல சிறிய ஊர்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்றன. இந்தியப் பாரம்பரியத்தைக் காட்டுகின்றன. இக்கட்டுரையில் தமிழகத்தைக் காண்போமா?

தென்னிந்தியர்களுக்கு ஒரு பெருங்குறை என்னவென்றால், இந்தியா வரும் பல அந்நிய நாட்டு சுற்றுலாப் பயணிகள் தென் இந்தியாவிற்கு வருவதில்லை. எல்லாச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களையும் கவரக்கூடிய பல இடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ் நாடு. கோயில்கள், சிற்பம், கட்டிடக்கலை, நினைவுச் சின்னங்கள், மலை நகரங்கள், வனவிலங்குகள், கடற்கரை மகிழ்விடங்கள் எல்லாம் தனிச்சிறப்பு வாய்ந்தவை. கோயில் கலை, சிற்பம், நினைவுச் சின்னங்கள், பல்லவ சோழ பாண்டிய மன்னர்களின் காலத்தைக் கண் முன்னால் வைக்கின்றது.

'கெட்டும் பட்டணம் போ' என்று சொல்வார்கள். சென்னைப் பட்டணமாயிருக்கிற இன்றைய சென்னை, பல்வேறு மத, மொழி, இன மக்களின் புகலிடம். எழில்மிகு மெரினா கடற்கரையையும், அதன் எதிரே கம்பீரமாகக் காட்சியளிக்கும். சென்னைப் பல்கலைக்கழக வளாகமும், கோட்டையும், அரசு அருங்காட்சியகமும், குழந்தைகள் பூங்காவும், வள்ளுவர் கோட்டமும், கபாலீஸ்வரர் கோயிலும், பிர்லா கோளரங்கமும், பார்த்தசாரதி கோயிலும், அடையார் ஆலமரமும், அண்ணா சதுக்கமும், சாந்தோம் கதீட்ரலும், வண்டலூர் மிருகக் காட்சிசாலையும், சுற்றுலாப் பயணிகளை வரவேற்கின்றன. தியாகராய நகர் (ரங்கநாதன் தெரு, பாண்டி பஜார்) பாரிமுனை, புரசைவாக்கம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள கடைகளில் எல்லாப் பொருட்களையும் வாங்க முடியும். தங்குவதற்காக கன்னிமரா ஹோட்டல், தாஜ்கோரமாண்டல், அடையார் பார்க், சோழா ஷெராட்டன், ஹோட்டல் ரெஸிடென்சி, ஸ்ரீலேகா இன்டர்காண்டினென்டல், ட்ரைடெண்ட், சிந்தூரி, தமிழக சுற்றுலாத்துறை தமிழ்நாடு ஹோட்டல், இளைஞர் விடுதி ஆகிய பல இடங்கள் உள்ளன. வட இந்திய உணவகங்களும், தென்னிந்திய சைவ உணவகங்களும் நிறைய உள்ளன. தமிழ்நாடு சுற்றுலாத்துறை, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கேற்ப ஒரு நாள் முதல் 10 நாள் வரை சுற்றுலாப் பயணத்திற்கு ஏற்பாடு செய்கிறது. இந்திய சுற்றுலாத்துறையும் இதைப்போல பல வசதியான சுற்றுலாப் பயணத் திட்டங்களைத் தருகிறது.

உலகப்புகழ்பெற்ற பல்லவ சிற்பக் கலையை மாமல்லபுரத்தில் காணலாம். சென்னையில் இருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள மகாபலிபுரத்தில் குகைக்கோயில்கள், செதுக்கோவியம், கடற்கரைக் கோயில் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. காஞ்சிபுரம் கோயில்கள் பல நிறைந்த ஒரு பொன் நகரமாகும். கைலாசநாதர் கோயில், ஏகாம்பரேசுவர்கோயில், வரதராஜ பெருமாள் கோயில், காமாட்சி கோயில் காணத்தகுந்தவை. நெசவுத்தொழிலுக்குப் பெயர் பெற்றது காஞ்சிபுரம். சிறந்த ரகப் பட்டுப்புடவை உற்பத்தியாகிறது. சென்னையில் இருந்து 320 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது திருச்சி. மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், கல்லணை, கங்கை கொண்ட சோழபுரம் காணத் தகுந்தவைகளாகும். வளங் கொழிக்கும் நிலத்தால் மட்டும் அல்லாது வரலாற்றின் புகழ் பூத்த பெருமையும் உடையது தஞ்சை மாவட்டம். சோழ மாமன்னர்களின் பொற்காலத்தை நினைவூட்டும் இடங்கள் பல உள்ளன. முதல் இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பெரிய கோயில் – பிரகதீஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர் ஆலயம் பிரசித்தி பெற்றது. 216 அடி உயரமுள்ள நடுவிமானத்தோடு, 793 அடி நீளமும் 397 அடி அகலமுள்ள இப்பெருங்கோயில் சோழர் காலக் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களில் ஒன்றான சரஸ்வதி மஹால் சரபோஜி மன்னர் காலத்தில் உருவானது. தஞ்சாவூர் நகரத்தைப் போன்று தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் பல உள்ளன. தஞ்சையில் இருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாறில் தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜரின் சமாதி உள்ளது. திருவையாற்றின் அருகே ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. ஐயாறு என்பதே திருவையாறு என்று வழங்கப்படுகிறது. இங்கு உள்ள பஞ்ச நாதேஸ்வரர் கோயில் புகழ் வாய்ந்தது. கும்பகோணத்தில் கும்பேஸ்வரன் சாரங்கபாணி, நாகேஸ்வரர், ராமசாமி திருக்கோயில்கள் உள்ளன. கும்பகோணம் சுற்றுவட்டாரத்தில் ஒப்பிலி யப்பன், திருவிடைமருதூர் மகாலிங்க ஸ்வாமி, சுவாமிமலை முருகன் காணத் தகுந்தவை. திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலும், கமலாலயம் என்ற திருக்குளமும் புகழ் மிக்கவை. வேதாரணியம் என்று அழைக்கப்படும் திரு மறைக்காடு ஆலயம் புகழ் வாய்ந்தது. எல்லா மதத்தினரும் வணங்கும் அன்னை வேளாங் கன்னி கோயில் புகழ் பெற்றது. நாகூர் தர்கா பிரசித்திப் பெற்றது.

வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது மதுரை. மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டது. அழகர் கோயில், திருப்பரங்குன்றம், திருமலை நாயக்கர் மஹால் காண்பவரை வியப்படையச் செய்யும். பழனி புகழ்பெற்ற யாத்திரை ஸ்தலம். கொடைக்கானல் மிகவும் புகழ்பெற்ற மலைவாழ் இருப்பிடம். இயற்கை அன்னை களி நடனம் புரியும் இடந்தான் ஏற்காடு. சேர்வராயன் மலைத்தொடரில் உள்ள எழில்மிகு மலை வாழிடமாய் விளங்குகிறது.

தென் பகுதிக்காசி என இந்துக்களால் கருதப்படும் இராமேஸ்வரம் தீவு - ராமாயண இதிகாசத்திலேயே சிறப்பிடம் பெற்ற பகுதி. இராமநாதசுவாமி கோயில் பிரசித்தி பெற்றது. இந்தியாவிலேயே மிக நீண்ட பிரகாரத்தைக் கொண்டுள்ள பெருமை ராமநாத சுவாமி கோயிலுக்கே உரியது.

மலை நகரங்களின் ராணி - நீலகிரி, மலையில் உள்ளது உதகமண்டலம். உதகையில் உள்ள ஏரி உல்லாசப் பயணிகளின் சொர்க்கம். அழகு கொஞ்சும் அற்புத தாவரவியல் பூங்கா. தொட்டபெட்டா சிகரமும் இங்குதான் உள்ளது. அருகில் கூனூரில் உள்ள சிம்ஸ் பூங்கா காணத் தகுந்தது. சிதம்பரத்தில் நடராஜப் பெருமாளைக் காணலாம். இக்கோயிலில்தான் இந்திய நாட்டியக் கலையின் பரம ரகசியம் அனைத்தும் அடங்கியுள்ளது என்று கருதப்படுகிறது. பிரசித்திப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இங்குதான் உள்ளது. சோழ, விஜயநகர, மராட்டிய அரசர்கள் மற்றும் பிரஞ்சுக்காரர் களின் போர்க்களமாக விளங்கிய செஞ்சிக் கோட்டை வரலாற்றுச் சின்னங்கள் அடங்கிய சுற்றுலா இடமாக விளங்குகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக்கோகர்ணம், சித்தன்னவாசல், குருமியான் மலை ஆகிய இடங்களில் உள்ள மலைக்குகை களில் காணப்படும் சிற்பங்களும், ஓவியங்களும் புகழ் வாய்ந்தவைகளாகும். இயற்கை எழில் நிறைந்த மாவட்டமாகத் திருநெல்வேலி திகழ்கிறது. நெல்லையப்பர் ஆலயம் சிற்பக் கலைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் - முருகன் கோயில் முக்கிய புனிதத் தலமாகத் திகழ்கிறது. ஆழ்வார்திருநகரி, நாங்குநேரி, ஆதிச்ச நல்லூர், கொற்கை, கிருஷ்ணாபுரம், கழுகுமலை ஆகிய இடங்களில் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. கோயம்புத்தூர் நகருக்கு அருகேயுள்ள பேரூர், சிற்பங்கள் நிறைந்த புனிதத் தலமாக விளங்குகிறது. பவானி, அவினாசி ஆகியவையும் புனிதத்தலங்களாகும். தேயிலைத் தோட்டங்கள் அடர்ந்த வால்ப்பாறையில் இயற்கை எழில் கொஞ்சும். தென் இந்தியாவின் மிகப்பெரிய கோயில்களில் ஒன்றான அருணாசலேஸ்வரர் கோயில் திருவண்ணாமலையில் உள்ளது. ரமண ரிஷியின் ஆசிரமமும், யோகி ராம்சூரத் குமாரின் ஆசிரமமும் உலகப் புகழ் பெற்றதாகும். கனிமங்கள் நிறைந்த சேலம் மாவட்டம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கவல்ல தாகவும் உள்ளது. இயற்கை எழிலையும் இனிமை பயக்கும் காலநிலைமையையும் கொண்டதாக உள்ளது கொல்லிமலை. நாமக்கல், திருச்செங்கோடு, தாரமங்கலம், சேலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாரியம்மன் கோயில் ஆகியவை புனிதத் தலங்களாகும். மயிலாடுதுறைக்கு அருகில் உள்ளது தரங்கம்பாடி. இங்குள்ள கோட்டை 1620ஆம் ஆண்டு டேனிஷ்நாட்டினரால் கட்டப் பட்டது.

இந்திய நாட்டின் நிலப்பகுதியின் முடிவுப் பகுதி கன்னியாகுமரி. வங்கக்கடல், இந்துமாக் கடல், அரபிக்கடல் ஆகிய முக்கடல்களும் சங்கமம் ஆகும் முக்கூடல் இது. சூரிய உதயம், அஸ்தமனம் கடல்மீது எழும் நிலவுத் தோற்றம் ஆகிய இயற்கைக் காட்சிகள், காண்போர் தம் கண்களுக்கு மிகச் சிறந்த விருந்தாகும். தெய்வீக ஆற்றலால் நாட்டைக் காப்பாற்றி வரும் கன்னித் தெய்வமான கன்னியாகுமரியின் ஆலயம் உள்ளது. இந்தக் குமரியின் மூக்கில் உள்ள மூக்குத்தி மிகவும் புகழ் பெற்றதாகும். இந்தியாவின் தந்தையான அண்ணல் காந்தி யடிகளின் நினைவாக காந்தி நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. கன்னியாகுமரி கோயிலுக்குத் தென் கிழக்கில் கடலில் இரண்டு பாறைகள் காணப்படுகின்றன. இந்த இரு பாறைகளில் ஒன்றில்தான், சுவாமி விவேகானந்தர் நீண்டகாலம் கடுந்தவம் செய்தாராம். இந்தப் பாறையில்தான் விவேகானந்தர் நினைவு ஆலயம் கட்டப் பட்டுள்ளது. கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது சுசீந்திரம். இங்குள்ள தாணுமாலயன் கோயில் பல்வேறு சகாப்தங்களுக்குச் சொந்தமான கலைப்பொருள் களின் கருவூலமாக விளங்குகிறது.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள திருக் குற்றால அருவியும், தருமபுரிக்கு அருகில் உள்ள ஒகேனக்கல் அருவியும் மனதிற்கு இன்பமூட்டும். மலைகள் சூழ்ந்த இந்த அருவிகளின் அழகிய காட்சியையும், பனி மேகங்கள் படர்ந்த எழிலையும் நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

தமிழ்நாட்டில் நல்ல சாலை வசதிகள் உள்ளன. எல்லா முக்கிய நகரங்களையும் இணைக்கும் வகையில் விரைவுப் பேருந்துகள் இரவும் பகலும் செல்கின்றன.



சுசீந்திரம்-கன்னியாகுமரி



# எங்கும் பாட்டு! எதிலும் பாட்டு!

திருமதி விஜயலட்சுமி மாசிலாமணி

தரணி போற்றும் தமிழர் பண்பாடும், தமிழர் நாகரீகமும் எண்ணும்தொறும் இன்பம் தரத்தக்கவை. நமது பண்பாடு, கடல் கடந்து மலை கடந்து எட்டுத் திக்கும் புகழ்ந்து பேசப்படும் ஒன்றாகும். நமது மக்கள் - தமிழ் மக்கள் கல்வி, கலை, கலாச்சாரத்தில் மேம்பட்டு விளங்குபவர்கள்; பழமையோடு கூடிய புது நோக்குக் கொண்டவர்கள்.

கலை உணர்விற்கும், தமிழர்களின் கற்பனை வளத்திற்கும் எடுத்துக்காட்டாக அவர்களது கவிதைத் திறனைக் கூறலாம்.

கருவிலிருந்து, கல்லறை வரை ஒரு உயிரின் நிலை, வளம், செழிப்பு, வனப்பு, வளர்ச்சி போன்றவை குறித்துத் தமிழர்கள் கவிதை பாடி வைத்துள்ளனர். எங்கும் பாட்டு, எதிலும் பாட்டு என்று பாடிச் சென்றுள்ளார்கள்.

ஒவ்வொரு பாடலும் காலத்தால் நிலைத்து நிற்கும் திறம் கொண்டவை மனித இனம் இருக்கும் வரை, மனிதனின் எல்லா நிலைகளுக் கும் பொருந்தும் சிறப்புப் பெற்றவை இப் பாடல்கள் என்றால் அது மிகையாகாது.

ஓர் உயிர் கருவறையில் தோன்றிவிட்டால், அவ்வுயிரைத் தாங்கும் பெண் 'தாய்மைப் பேறு' அடைந்ததாகக் கருதப்படுகிறாள். ஈருயிர் கொண்ட அப்பெண் பலவாறு பாராட்டப் படுகிறாள். செயற்கரிய தவம் செய்து, அந்தப் பெண், இந்தப் பேறு பெற்றுக் குழந்தையை ஈன்றெடுத்தாளோ என்ற வகையில் பாடல் பாடி மகிழ்ந்துள்ளனர்.

**"கண்ணுமணி பொன்னுமணி கந்தருடைய வேலுமணி**
**வேலுமணி வேணுமென்று வெகுநாள் தவசிருந்தேன்**
**வேலுமணி வேணுமென்று வெகுநாள் தவசிருந்தேன்.**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**ஆத்து மணலிலே அருந்தவசு செய்கையிலே**
**பாத்திருந்த பரமசிவன் பாலகனைத் தந்தாரே"**

உலகத்திலிருக்கும் இனிய பொருட்களை எல்லாம் குறிப்பிட்டுக் குழந்தையைத் தாய் வாழ்த்துவதாக ஒரு பாட்டு:

**"என் கண்ணே, மணியே! கருத்துள்ள கண்மணியே!**
**பொன்னே மயிலே என் கட்டிக் கரும்பே**
**தேனே, பாலே, என் திகட்டாக் கனியே**

**மானே, மதியே என் மரிக் கொழுந்தே**
**குத்து விளக்கே என் கோபுரமே நீயுறங்கு"**

இந்தப் பாடலில் ஒவ்வொரு சொல்லும் தேன் சொட்ட இனிப்பதை நாம் உணரலாம்.

குழந்தை அழுதால், அதைக் கட்டி யணைத்துச் சமாதானப்படுத்த ஒரு பாட்டு:

**"யாரடிச்சு நீ அழுதே ? – என் கண்ணே**
**அடிச்சாரைச் சொல்லி அழு.**

**அத்தை அடிச்சாளோ ? – என் கண்ணே**
**அரளிப்பூச் செண்டாலே.**

**மாமன் அடிச்சானோ ? – என் கண்ணே**
**மல்லிகைப் பூச் செண்டாலே.**

இப்படியாக இந்தப் பாட்டுச் செல்கிறது. இதிலே பாருங்கள். குழந்தையை யாரும் அடிப்ப தில்லை. ஆனால், குழந்தை யாரோ தன்னை அடித்ததுபோல் அழுகிறது. அதனால், தாயும், யாரம்மா உன்னை அடித்தார்கள்? அத்தையா? மாமனா? அதுவும் மென்மையான பூச் செண்டுகளால் அடித்தார்களா? என்று கேட்கிறாள். என்னே ஒரு கற்பனை பாருங்கள்?

குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறான்; அதற்கொரு பாட்டு.

**"கண்ணன் பிறந்தான் – எங்கள்**
**கண்ணன் பிறந்தான் – மனக்**
**கவலைகள் மறந்ததம்மா.**
**மன்னன் பிறந்தான் – எங்கள்**
**மன்னன் பிறந்தான் – மன**
**மகிழ்ச்சிகள் நிறைந்ததம்மா"**

என்று, குழந்தை பிறந்ததால் தங்கள் கவலைகள் போயின என்று பெற்றோர் பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

குழந்தையின் மழலை மொழியிலே மகிழ்ந்து அதையும் பாட்டாகப் பலர் பாடியுள்ளனர்.

திருவள்ளுவரின் இதோ இந்தக் குறளைப் படித்துப் பொருள் உணர்ந்து இன்பம் காணுங்கள்:

**"குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்**
**மழலைச் சொற் கேளாதவர்"**

இந்தக் குறளில் பரந்த நோக்கோடு 'தம்' என்ற சொல்லை எடுத்துவிடலாம் என்பது என் கருத்து. ஏனென்றால், 'தம்' மக்கள் என்றில்லாது யார் மக்களாக இருந்தாலும், குழந்தையின் மழலை, எல்லோர் மனதிற்கும் மகிழ்ச்சியே அளிக்கும். ஆயின், காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சல்லவா? அதுவும் உண்மைதான்.

குழந்தை வளரும் பருவத்திற்கொரு பாட்டு – பள்ளி செல்ல ஒரு பாட்டு – பாடம் கற்க ஒரு பாட்டு!

**"ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா.**
**கூடி விளையாடு பாப்பா – ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா.**

. . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . .

**காலை யெழுந்தவுடன் படிப்பு – பின்பு**
**கனிவு கொடுக்கும்நல்ல – பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு – என்று**
**வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா"**

குழந்தை வளரும் சமயத்தில், எந்தவித சாதி மத வேறுபாடுமின்றி எல்லோரிடமும் சமத்துவ மாகப் பழக, அக்குழந்தைக்கு அறிவுறுத்தும் பாட்டு:

**"சாதிகள் இல்லையடி பாப்பா; – குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;**
**நீதி, உயர்ந்தமதி, கல்வி – அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்"**

இப்படி வளரும் குழந்தை – வளர்க்கப் படும் குழந்தை சிறுவனாகிச் செழித்து வளர்ந்து, முகத்திலே மெல்லிய பருக்கள் தோன்ற, மேலுதட்டில் மீசை அரும்ப, வாலிபனாகிறான். இந்த வாலிபப் பருவத்தைப் புகழ்ந்து பல பாடல்கள் உள்ளன. இதே போல், சிறுமி, மேனி செழித்துப் பொன் மேனியாகிப் பூப்பெய்கிறாள். 'பெரியவள்' என்ற நிலை அடைகிறாள். இவ்வாறு பெண்கள் பூப்பெய்தல் அவர்க ளுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான பருவநிலை ஆகும். பெண்ணின் இத்தகைய நிலையை ஊராருக்கும், உறவினருக்கும் அறிவிக்கும் வகையில் அந்த நிகழ்ச்சி ஆடல்பாடல்களோடு கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சி பழங்குடி மக்களிடையே சிறப்பாகக் காணப்படுகிறது. நகர்ப்புறங்களில் இந்நிகழ்ச்சிக்கு மக்கள் அவ்வளவாக முக்கியத்துவம் தருவதில்லை.

வாலிப வயதிலே, வயதிற்கேற்றபடி, வனப்பு தரும் இலயிப்பிலே வாலிப உள்ளங்கள், இனக் கவர்ச்சி கொண்டு காதல் வயப்படுவது இயற்கையாகிவிடுகிறது. இந்த நிலையிலே, காதலியின் மனதிற்கேற்பப் பாட்டு, காதலனின் மனதிற்கேற்பப் பாட்டு என்று பலவகைப் பாடல்களைத் தமிழ்நாட்டுக் கிராமப்புற மக்கள்

www.tamilarangam.net

போகிற போக்கிலே சொல்லிவிட்டுப் போயிருக் கிறார்கள். அவை அத்தனையும் கருத்துச் செறிவு மிக்க பாடல்களே! அவை தரும் சுவை புதிது. ஏன் பொருளும் புதிது!

காதலன் தனக்காகப் பட்டுப் புடவை வாங்கி வருவான் என்ற காதலியின் எதிர் பார்ப்பைக் கூறுவதுபோல் அமைந்துள்ள ஒரு பாடல்:

"வண்டி வரும், வண்டி வரும்
ஆயிரமாம் வண்டி வரும்!
என்னென்னவோ சரக்கு
ஏத்தி வரும் வண்டியிலே! – ஆனா
எங்க மச்சான் வண்டியிலே
எனக்கேத்த பட்டு வரும்!"

இதேபோல், மனங்கவர்ந்த காதலியைப் பற்றிக் காதலன் பாடும் பாட்டு மிகவும் ரசனை யுடையதாக இருக்கும். இதோ உதாரணத்திற்கு ஒன்று:

"மானுக்கு மேலழகு
மயிலுக்கு வாலழகு
தேனுக்கு ஈயழகு – என்
தேன் மொழிக்கு நானழகு.
. . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . .
முல்லைச் சிரிப்பழகும்
முகத்தழகும் கண்ணழகும்
வல்லியிடை அழகும் – என்
மனசை உட்டுப் போகுதில்லே
வானை வளைச்சி
வான வில்லுப் போட்டாப் போல
மார வளைச்சி – ஒரு
மஞ்சள் வில்லுப் போட்டதென்ன?"

இவ்வாறு காதல் வயப்படும் உள்ளங்கள் ஒன்று சேர்வதில் பல இன்னல்கள் ஏற்படுவது உண்டு. அதில் காதலன் தண்டனை பெறுவதும் உண்டு. அப்போதைய நிலைக்கும் பாட்டு உண்டு:

"உன்னை நான் தொட்டதுக்கும்
உங்கப்பன் பேரைச் சொன்னதுக்கும் – இப்ப
மருதைச் செயிலிலே – நான்
மாடாய் உழைக்கிறேண்டி!"

இப்படியெல்லாம் துன்பப்பட்டு, விடா முயற்சியோடு காதலன், காதலியைக் கைப் பிடிக்கக் காதலியின் தாய், தந்தையரின் கால் பிடித்துத் திருமணத்திற்குச் சம்மதம் வாங்கி விட்டால் அதற்கும் பாட்டுக்கள் உள்ளன.

மணமக்களைச் சூழ்ந்து கொண்டு பெண்கள், இறை வேண்டுதலாகவும், இன்பத் தூண்டுதலாகவும் பாடும் பாடல்கள் நினைந்து, நினைந்து நெஞ்சம் மகிழத் தக்கவையாகும்.

"அய்யா நாரணரும், அம்மை உமையவளும்
தெய்வார் மனமிரங்கித் திருமுகூர்த்தம் செய்யவே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அவனி அறியவே அலங்காரம் இட்டனரே!
அனைவரும் கூடிடவே அங்கெல்லாம் இன்பமதே
பட்டுக்கு மேல் பட்டுடுத்திப் பந்தலிலே தானிருத்தி
மாப்பிள்ளையும், பொண்ணையும் மணவறையில்
தானிருத்தி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அழகு கொலுவிருக்க ஆனந்தம் கொஞ்சி நிற்க
அரகரா என்று சொல்லி அம்மையுரை தானெழுந்து
சிவசிவா என்று சொல்லித் திருச்சரடு சாத்தினரே!"

திருமணம் இனிதே நடந்து முடிந்தபின்பு, அந்தத் திருமணத் தம்பதியரை வாழ்த்த ஒரு பாட்டு:

"இல்லறத்தின் கோபுரத்தில் ஏறுகின்ற இனியவரே!
நல்லறத்தின் வீதியிலே நடக்கின்ற நாயகரே!
இருமனங்கள் ஒருமனமாய் இணைந்திருக்கும்
திருநாளில்
திருக்குறளின் ஒளி காண்பீர்! சீர் மிகுந்த
நெறிகாண்பீர்!
அன்பொன்றே வலிமையென அறிந்தால் மகிழ்ச்சி
வரும்!
பொன்னகை குறைந்தாலும் புன்னகை நிறையட்டும்."

இவ்வாறு 'திருமணம்' என்ற பிணைப்பில் இணைந்திடும் புதுமணமக்களுக்கு, வாழ்த்தும், அறிவுரையும் கூறி அவர்களை வழிநடத்திச் செல்ல நம் முன்னோர் 'திருமண நாள் நல்வாழ்த்தைப்' பாடலாகப் பாடிச் சென்றுள்ளனர். இன்றும் இவ்வழக்கம் கிராமங் களிலும், நகர்ப்புறங்களிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இல்வாழ்க்கையில் இனிதே நடைபயின்று எல்லா வளமும், நலமும் பெற்று, குழந்தைப் பேறு பெற்றுத் தம்பதியர் இனிதே குடும்பம் நடத்தும் பாங்கினைப் பறைசாற்றவும் பாட்டுகள் உள்ளன.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்"

என்றார் பாவேந்தர் பாரதிதாசனார்.

ஆம்; நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் தான்.

இப்படி நாட்டிலுள்ள அனைத்துக் குடும்பமும் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தால், நாட்டில் துயரேது? துன்பமேது?

www.tamilarangam.net

மனிதன் பிறந்து, வாழ்வாங்கு வாழ்ந்து பின்பு இயற்கையின் கட்டளைப்படி ஒருநாள் 'இறப்பு' என்ற நிலையை அடைகிறான்.

திருவள்ளுவரின் கூற்றுப்படி, இவ்வுலகம்–

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை படைத்துஇவ் வுலகு"

என்ற பெருமை உடையது.

இறப்பு என்பது யாரையும் விட்டு வைப்பது இல்லை. அது மனிதனை என்று? எப்போது? எந்த வழியில்? தழுவிக் கொள்ளும் என்பது யாரும் அறியாத புதிர்.

இந்தக் கருத்தைத் திருமூலர்,

"அடப்பண்ணி வைத்தார்,
அடிசிலை உண்டார்,
மடக்கொடி யாரொடு
மந்தணக் கொண்டார்,
இடப்பக்க மேஇறை
நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார்,
கிடந்தொழிந் தாரே,

என்ற பாடல் வரிகளில் மிக அருமையாகக் கூறிச் சென்றுள்ளார்.

மனிதன் தன் சுற்றத்தை விட்டுப் பிரிந்த பின்பு அவனது சுற்றம் அவனது இழப்பு குறித்தும், அவனது இனிய முகத்தை எப்போது இனிக் காணப்போகிறோம் என்ற பலவிதமான கவலையிலும் தன் துயர நிலையை வெளிப்படுத்துகிறது. இறந்தவரை நினைத்து ஏங்கியழும் பாடல்கள் 'ஒப்பாரிப் பாடல்கள்' எனப்படும். இறந்தவரைப் புகழ்ந்தும், அவருடைய வாழ்க்கையில் நடந்த முக்கியமான செய்திகளைக் குறிப்பிட்டும் ஒப்பாரிப் பாடல்கள் அமையும்.

பல்வேறு விதமான உணர்வுகளையும், சுவைகளையும் வெளிக் கொணரும் ஒப்பாரிப் பாடல்கள், கிராமியப் பாடல்களில் தனிச் சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

தந்தையை இழந்த மகளின் புலம்பல்:-

"நீலக் குடைபிடிச்சு – என்னைப் பெத்த அப்பு
நீங்க, நிலம் பாக்கப் போனாலும் – அந்த
நிலமும் பயிராகும் – நீங்க
நின்ன இடம் தோப்பாகும்"

என்று பாடலாக வெளிப்படுகிறது.

இம்மண்ணுலகை விட்டு நீங்கும்போது மனிதன் தன்னோடு எதையும் எடுத்துச் செல்லப் போவதில்லை என்பதை உணர்த்தும் கவிஞர் கண்ணதாசன் அவர்களின்,

"வீடுவரை உறவு
வீதிவரை மனைவி
காடுவரை பிள்ளை
கடைசிவரை யாரோ ?"

என்ற இந்த பாடல் படித்துப் படித்துப் பொருள் அறியக் கூடிய ஒன்றாகும்.

இவ்வாறு, எங்கும் பாட்டு, எதிலும் பாட்டு என்று தங்களது உணர்ச்சிகளை – உள்ளத்துத் துள்ளல்களை – உள்ளத் துவழல்களை, நயத்தோடும், சொற்சுவையோடும், பொருட்செறிவோடும் பாடிப் பரவசமடையும் தமிழரின் கவித்திறன் காலம் உள்ளமட்டும் பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

□ □ □

## பழைய பாக்கி

அரசன் : புலவரே, எங்கே என்னைப் புகழ்ந்து ஒரு பாட்டு பாடும்!

புலவர் : பாடுகிறேன் அரசே! ஆனால் அந்த பழைய பாக்கியே இன்னும் கொடுத்து முடிந்த பாடில்லையே...

–திரு. மனோகரன்



மகாபலிபுரம்

www.tamilarangam.net

# தமிழ் சிறுகதைகள் – இன்று

மதுர பாரதி

'நான் விட்டுச் சென்ற சிறுகதைச் சிம்மாசனம் இன்னும் காலியாகவே இருக்கிறது' என்று செம்மாந்து கூறுவார் ஜெயகாந்தன். இனி மேலும் அந்தச் செம்மாப்பு' நீடிக்க முடியாது. சுஜாதா என்கிற புயல் தமிழ் உரைநடையைப் பாரதிக்குப் பின் முற்றிலும் ஒரு புதிய விசையும் வீச்சும் கொண்டதாய்ச் செய்துவிட்டிருக்கிறது என்றால் அது மிகையல்ல. ஆழ்ந்த விஞ்ஞான அறிவும் அதற்குச் சற்றும் குறைவு இல்லாத தமிழ்க் கல்வியும் முனைந்து பெற்ற இவர் பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரமும் நன்கு கற்றவராதலால் எவரினும் சிறப்பாக எழுதுவது இவருக்குச் சாத்தியமாகிறது.

இவருடைய இந்த சிறுகதை ஆதிக்கத்திற்கு சமீப காலச் சான்று கல்கியில் வெளிவந்த 'மீண்டும் மத்யமர் கதைகள்'. எந்த இஸங்க ளாலும் பாதிக்கப்படாமல், வாழ்க்கையை வெகு அணுகிப் பார்த்து, சூடும் சுவையுமாய் ஆரவாரமில்லாமல் சொல்லுகிற பாணி இவருக்கே உரித்தானது.

ஆனால் நாம் பேசப் புறப்பட்டது தமிழில் சிறுகதை என்பது குறித்து, சுஜாதாவின் விஸ்வ ரூபத்திலேயே லயித்து நம்மை மறந்து விடுவது சரியில்லை. ஒரு பக்கக் கதை, அரைப் பக்கக் கதை, கால் பக்கக் கதை என்று தேய்ந்து கொண்டே போன இந்தப் பிராணி குமுதத்தில் சிலவரிக் கதை என்கிற நிலமையைக் கூட எட்டி விட்டது. இனிமேல் துணுக்குகளைச் சிறுகதை அந்தஸ்திற்கு உயர்த்திவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

நல்ல வேளையாக கல்கி, ஆனந்த விகடன் போன்றவை இந்தப் பிணியினால் அதிகம் பீடிக்கப்படவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சற்று வெளியே பார்ப்போமானால் ஆங்கிலத்திலே வருகிற சிறுகதைகள் நம் குறு நாவல்களின் அளவைச் சாதாரணமாகத் தாண்டி விடுகின்றன. தமிழிலோ குறுநாவல் என்கிற வடிவம் ஒன்று இருப்பது கணையாழி தவிர வேறு யாருக்கும் நினைவிருப்பதாகத் தெரியவில்லை. சிறுகதைகளும் கட்டெறும்பாய்ச் சுருங்கிக்கொண்டிருக்கின்றன.

மனதைத் தொடுகின்ற நல்ல சிறுகதை களைப் பெருமளவில் பார்க்கவேண்டுமானால் தாமரை, கணையாழி, குங்குமம் போன்றவற்றை தான் நாடவேண்டியுள்ளது. பரிசோதனை முயற்சிகள் பல கணையாழி, நவீன விருட்சம் முன்றில் போன்றவற்றில் காணக்கிடைக்கின்றன. ஆனாலும் புரிபடாமை, தொடர்பிலா ஓட்டம், எளிமையொழிந்த நடை என்று ஏதாவதொரு காரணத்தால் இவை வாசகனை எட்டாமல் போய்விடவும் செய்கின்றன.

சுஜாதாவிற்கு அடுத்தபடியாகச் சொல்ல வேண்டுமானால் இரா. முருகன் பெயர்தான் நினைவிற்கு வருகிறது. பேய், பிசாசு, யக்ஷிணியிலிருந்து சாமான்ய மனிதன் வரை எல்லாவற்றையும் லாவகத்தோடும் இயல்பான சொல்லாட்சியோடும் சித்தரிக்கிறார். பாவண்ணன், ம.வே. சிவகுமார், மேலாண்மை பொன்னுச்சாமி, பிரபஞ்சன், எஸ். சங்கர நாராயணன், தோப்பில் முகமது மீரான், களந்தை பீர்முகமது, சோ. தருமன் ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

வழக்கமாக வருடத்தின் சிறந்த சிறுகதைகள் பன்னிரண்டைத் தொகுத்து இலக்கியச் சிந்தனை வெளியிடுவது தவிர வானதி உட்பட பல பதிப்பகங்கள் சிறுகதைத் தொகுதிகளைப் பதிப்பித்திருப்பது சிறுகதை களுக்கு ஒரு புதிய மவுசு ஏற்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

பரவலாகப் படிக்கப்படும் இதழ்களில் எண்ணிறந்த புதிய எழுத்தாளர்கள் எழுதுகிறார் கள் என்பது நம்பிக்கையும் அச்சமும் ஊட்டுவதாக இருக்கிறது. இவர்களில் பெரும் பாலோருக்கு நல்ல மொழிப்பயிற்சி இல்லை என்பதும், ஃபார்முலாக் கதைகள் எழுதி அச்சில் பெயரைப் பார்த்துவிடுகிறார்கள் என்பதுமே அச்சத்திற்குக் காரணம். ஆனால் நிறையப்பேர் வெளிச்சத்திற்கு வருகிற சூழ்நிலை ஏற்பட்டிருப்ப தும், இவர்களில் சிலராவது முழுமையான சிறு கதை எழுத்தாளர்களாகப் பரிணமிக்க வாய்ப்பிருக்கிறது என்பதும்தான் நமது நம்பிக்கையின் அஸ்திவாரங்கள்.



கொடைக்கானல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைசிறந்த தமிழர்கள்

வ. மாசிலாமணி

இரண்டாயிரம் ஆண்டுப் பாரம்பரிய முள்ள தமிழ்ச் சமுதாயத்தில் மிகச் சிறந்த தமிழர்கள் பற்றிய குறிப்பு இது. இருபதாம் நூற்றாண்டு முடியும் தறுவாயில் 'Stock taking' செய்யும் முயற்சி.

இந்தப் பட்டியலில் தமிழுக்கும் தமிழ் சமுதாயத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் தந்தவர்கள் இடம் பெறுகிறார்கள். இவர்களில் சிலர் தமிழராய்ப் பிறக்கவில்லை; எனினும் அவர்களால் தமிழ் பெருமை பெற்றது. (இப்பெரு மக்கள் சிலரது காலம் விவாதத்திற்குரிய விஷயம்; ஓரளவாவது சரியானது)

இந்தத் தொகுதியில் பெரும்பாலும் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களே உள்ளனர். தமிழ்ச் சமுதாயம் இப்போது உலகளாவியது. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, கானடா, தென் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் அற்புதமான தமிழ்ச் சேவை செய்து வருகிறார்கள். எனினும் அவர்களைப் பற்றிய தெளிவான விவரங்கள் தெரியவில்லை. எனவே இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. இது ஒரு குறைதான். இவ்விவரங்கள் தெரிந்தவர் கள் இதன் தொடராக மற்றொரு தொகுப்பு செய்தால் மிக நல்லது.

இடம் பெற்றவர்கள் சாதனை செய்தவர்கள் என்பது சந்தேகமில்லை. சிலர் விட்டுப் போயிருக்கலாம். (இருப்பின் சுட்டிக் காட்டுக)

1. தொல்காப்பியர் - சுமார் கிமு. 2ம் நூற்றாண்டு. தமிழுக்கு மட்டுமல்ல தமிழன் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தவர். முதல் இலக்கணி, முதல் விஞ்ஞானி; முதல் நூலகர்; முதல் நாடக ஆசிரியர். அரிஸ்டாட்டிலுக்கு அண்ணன்.

2. கபிலர் - கி.மு. 100. புலனழுக்கற்ற அந்தணாளன். இவர் பாடாமல் விட்டு வைத்தது எதுவுமில்லை. குறிஞ்சிக்கு கபிலன். ஒவ்வொரு பூவுக்கும், இலைக்கும், நரம்பிற்கும், நாளத்திற்கும் ஒரு தமிழ் வர்ணனை. இயற்கையை இவர்போல ரசித்தவர் எங்கும் இல்லை.

3. ஔவையார் - தமிழ்ப்பாட்டி. கிமு 100 அறிவுச்சுடர். கம்பீரம் - பெண்குலத்திற்கே பெருமை. கபிலர்-பாரி-ஔவை-அங்கவை-சங்கவை ஒரு சோகக் கதை.

4. நக்கீரர் - (கிமு 100) தமிழ்நாட்டுக்கு முருகனைத் தந்தவர். பத்திச் சுவை. இயற்கை நயம். "நெற்றிக் கண் திறக்கினும் குற்றம் குற்றமே!" என்ற செம்மாப்பு.

5. கணியன் பூங்குன்றன் - கிமு 100. "யாதும் ஊரே, யாவரும் கேளிர்' பரந்து பட்ட மனம். கிரேக்கத்து stoics உறவாடியிருப்பார்களோ?

6. கரிகாற் சோழன் - கிமு 100 காடுகளை நாடாக்கியவன். கல்லணை கட்டி காவிரிக்கும் கட்டுப்பாடு போட்டவன். சங்கப்பாட்டுத் தலைவன். நீதிவான்.

7. திருவள்ளுவர் - கிமு 30. உலகப் பொதுமறை தந்தவர். இரண்டடிகளால் உலகளந்த ஞானி. சாக்ரடீஸுக்கு சகலை.

8. சேரன் செங்குட்டுவன் - கி.பி. 100 கி.பி 200-400 இமயம் வரை சென்று கண்ணகிக்குக் கல் கொணர்ந்த மாமன்னன். இளங்கோவடிகள் அண்ணன். இலங்கை கயவாகு நண்பன்.

9. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் இசைத்த சேரன் தம்பி. முதல் நாடகக் காவியம். தமிழகம் மூவேந்தரை இணைத்த காவியம். ஒரு பத்தினிப்பெண் காவியத் தலைவி. வர்கில், காளிதாசன் தரம்.

10. சீத்தலைச் சாத்தனார் - மணிமேகலை செய்தவர் (கி.பி. 200-400) அற்புத சமண பௌத்த இலக்கியம்.

11. அப்பர் - திருஞானசம்பந்தர், சுந்தரர், காரைக்காலம்மையார்: கி.பி. 800- இந்தியா முழுமைக்கும் பக்தி இலக்கிய வித்துக்கள். உருக உருக மெருகேற்றும் கவிதை.

12. நரசிம்ம பல்லவன் - கி.பி. 800. தோற்றம் வடநாடு கல்லிலான கோவில் .சிற்பம். வடநாட்டு இசை கலாச்சாரம் வேரூன்றல். காஞ்சி கல்வியின் மையமாதல்.

13. ராஜராஜ சோழன், ராஜேந்திரச் சோழன் - கிபி 100. தமிழரின் பொற்காலம். ஒரு முன்னூறு ஆண்டு நிலையான அரசு . அகண்ட தமிழகம். Norman kings போல நிலத்தை அளந்து முறை செய்தல். தமிழ் திரை கடல் ஓடித் திரவியம் சேர்த்தது. பல்லவர் துவங்கிய கற்றளி தமிழகம் எங்கும் கோவிலாதல்.

14. மாணிக்கவாசகர்: கி.பி. 1100. தேவாரம், திருவாசகம், திருப்பாவை பக்தி இலக்கியங்கள்.

www.tamilarangam.net

தமிழ் போன்ற ஆழ்ந்த நிறைந்த பரந்த பக்தியிலக்கியம் வேறெங்கும் உண்டா?

15. திருத்தக்க தேவர்- (கி.பி 1000 ?) சீவக சிந்தாமணி. காவிய நயம்.

16. ஆண்டாள், நம்மாழ்வார், தொண்ட ரடிப் பொடியாழ்வார். (கிமு. 900-கி.பி. 1100) கண்ணனைக் காதலிக்கும் கவிதை. கோதை காதல் பிரவாகம்; பக்திப் பிரவாகம் மற்றவர்கள். வைணவம் தழைத்தல்.

17. கம்பர் (1000-1200) இராமகாதை. தமிழ் ஷேக்ஸ்பியர், மில்டனின் அண்ணன். உளவியல் வல்லுனன்.

18. சேக்கிழார்: (1200) பெரிய புராணம். முதன்மைச் சிவபுராணம். பக்திச் செறிவு.

19. குலோத்துங்கன்: (1100) கலிங்கம் எறிந்தவன். ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி. இன்றைய ஆங்கிலப் படங்கள் போல strong violence, erotics)

20. புகழேந்தி (1200) வெண்பாவிற்கு புகழேந்தி Wordsworthம் Keats சேர்ந்த கலவை. அற்புதக் கவிதைகள்.

21. திருமூலர் (1200) முதல் சித்தர். சூத்திரக் கவிதை. சொல்லில் கட்டுப்பாடு. ஆண்டவனை அறிவுபூர்வ அணுகுமுறை.

22. அருணகிரிநாதர்: (1400-1600) அருமை யான சந்தக் கவி. முருகன் வழிபாடு. முக்கியமாகிறது இவரால்.

23. பதினெண்சித்தர்கள் (1500-1900) அறிவு முனைப்பில் விஞ்ஞானத்தையும் மெய்ஞானத் தையும் ஆய்ந்தவர்கள். பலர் கூர்த்த மதி சிந்தனையாளர். மூடநம்பிக்கை ஒழிப்பு. பெண்ணாசை கேவலம்; குண்டலினிசக்தி. exotic topics. பட்டினத்தாரும் கருவூர்த் தேவரும் என் பதினெட்டுப்பேர்)

24. பரிமேலழகர் - நச்சினார்க்கினியர் - இளம்பூரணர் மெய்கண்டார் - பெரியவாச்சான் பிள்ளை (1600-1800) சங்க இலக்கிய சைவ, வைணவ உரையாசிரியர்கள். ஆழ்ந்த தத்துவ ஆய்வு. மணிப்பிரவான நடை. உரைநடை மறுமலர்ச்சி.

25. வீரமாமுனிவர் (1800) - தமிழ் 'தடுத்தாட் கொண்ட' வெள்ளையர். புலவர். எழுத்துச் சீர்திருத்தம். உரைநடை பெரும் மேம்பாடு.

26. கட்டபொம்மன், புலித்தேவன், ராஜா தேசிங் (1700-1800) விடுதலை வேட்கை விழைத்த வீர மறவர்கள்.

27. ஆனந்தரங்கம் பிள்ளை (1700) புதுவை டியூப்ளே கூடவே இருந்து ஆங்கில பிரெஞ்சுப் போர் பற்றி தகவல் தந்த அக்கால CNN Network ஒரு வித்தியாசமான சரித்திர நாவல்.

28. அருணாச்சல கவிராயர் முத்துத் தாண்டவர் : தமிழ் இசைத் தலைவர்கள்.

29. இராமலிங்க அடிகள் (1900) அருட் பெருஞ்சோதி சமரச சன்மார்க்கம். தேன்தமிழ்ப் பக்தி.

30. வேதநாயகம் பிள்ளை, மாதவையா (1900) தமிழ் நாவலாசிரியர்கள். தமிழுக்குப் புதுச் சோலை.

31. குணங்குடி மஸ்தான் சாகிப் (1800-1900) தத்துவ ஞானி. கவிஞர். இவர் ஒரு Sufiயோ?

இருபதாம் நூற்றாண்டு

32. பாரதி - நீடுதுயில் நீக்க பாடி வந்த நிலா, அக்கினிக் குஞ்சு.

33. சுப்பிரமணிய சிவா - சுதந்திர சிம்மம்

34. வ.உ.சி - கப்பலோட்டிய தமிழன். இலக்கிய செம்மல்.

35. திருப்பூர் குமரன் - தேசிய சிங்கம்

36. வள்ளியம்மை - காந்தியே கையெடுத்துக் கும்பிட்ட தென்னாப்பிரிக்க விடுதலை வேங்கை.

37. ஜியு போப், கால்டுவெல், ஹீராஸ், கமிலஸ்லபில் வெள்ளைத் தமிழர்கள். தமிழின் அருமையை உலகறியச் செய்தவர்கள்.

38. பாண்டித் துரைத்தேவர். நான்காம் தமிழ்ச் சங்கம். நிறுவிய வள்ளல்.

39. வ.வே.சு. அய்யர். தமிழ் தாத்தா. உழைப்பின் சின்னம். இவர் ஆசிரியர். மகாவித்வான். மீனாட்சி சுந்தரம்பிள்ளை. ஒரு தமிழ்க்கடல்.

40. சி.வை. தாமோதரம் பிள்ளை. உ.வே.சாவின் தம்பி.

41. சர். சி.வி. ராமன். ராமானுஜம். K.S. கிருஷ்ணன், சந்திரசேகர். G.N. ராமச்சந்திரா விஞ்ஞான சாதனைக்கு 'படைவீடுகள்'

42. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை முழுமையான தமிழ்நாடகம்.

www.tamilarangam.net

43. அழகப்பச் செட்டியார். அண்ணாமலை செட்டியார் இயல், இசை, நாடகம், அறிவியல் என்று நான்கும் காத்த பெருவள்ளல்கள்.

44. திரு.விக, மறைமலை அடிகள். உரை நடை. தமிழ். ஒருவர் தென்றல். அடுத்தவர் சமுத்திரம்.

45. தினத்தந்தி ஆதித்தன், விகடன் வாசன், தமிழ்வாணன். தமிழ் பத்திரிகை உலகப் பெரு வேந்தர்கள். ஆழ்ந்த தாக்கம் செய்தவர்கள்.

46. தெ.போ. மீனாட்சி சுந்தரம், ராய சொக்கலிங்கம், ஔவை துரைப்பிள்ளை, வேங்கடசாமி நாட்டார், சரவண முதலியார், சேதுப்பிள்ளை, சோமசுந்தர பாரதியார். சிறந்த தமிழ் அறிஞர்கள். எழுத்தாலும் பேச்சாலும் எங்கும் தமிழை உயர்த்தியவர்கள்.

47. பாரதிதாசன்: புரட்சிக் கனல், சமுதாயத்திற்குச் சாட்டை அடி கொடுத்துத் திருத்திய கவிஞர்.

48. மு.வ. முதல் தரமான வெற்றிகரமான நாவலாசிரியர். சமுதாயச் சீர்திருத்தம்; நல்லவர்களாக வல்லவர்களாகத் தமிழரை பெருமைப் படுத்தும் முயற்சி.

49. பெரியார் ஈ.வே.ரா. பகுத்தறிவுப் பகலவன். வள்ளுவருக்குப் பிறகு தமிழர் சிந்தனையில் பெரும் மாற்றம் செய்தவர்.

50. அறிஞர் அண்ணா: நயமான ஆழமான பேச்சாளர். திராவிடத் தென்றல். கோடிக் கணக்கான மக்கள் இதயத்தைக் கொள்ளை கொண்டவர்.

51. காமராசர்: கருப்பு காந்தி. தீர்க்க சிந்தனை - திடமான செயல்.

52. கல்கி: தமிழ்நாட்டு வால்டர் ஸ்காட். பலர் மனம் கவர்ந்த நாவலாசிரியர். எழுத்தை ஆண்டவர்.

53. பி.டி. சீனிவாச அய்யங்கார், மு. ராகவ அய்யங்கார், நீலகண்ட சாஸ்திரி, கா.சு. பிள்ளை. வையாபுரி பிள்ளை. ராஜமாணிக்கனார் இவர்கள் தமிழ் சரித்திரத்தை இலக்கியத் திறனை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தவர்கள்.

54. இராஜாஜி: முதல் இந்திய கவர்னர் ஜெனரல். அரசியல் ஞானி. இலக்கிய ஞானி. ஒரு மாமலை.

55. குன்றக்குடி அடிகள்: காவியுடையில் ஒரு கர்மவீரர். தமிழும் மெய்ஞானமும் விஞ்ஞானமும் சேர்ந்த அருமையான மனிதர்.

56. கலைக்கதிர் தாமோதரன். அறிவியல் தமிழின் தந்தை.

57. டி.கே.சி, சா. கணேசர். இலக்கியத் தேனீக்கள்.

58. கி.ஆ.பெ. விசுவநாதம், P.T. ராஜன் தமிழ்க் காவலர்கள். எளிய தமிழ்; இனிய தமிழ்.

59. கண்ணதாசன்: தமிழ்க் கவிதையை எல்லாரும் முணுமுணுக்கச் செய்த முழுமையான திரைப்பாடலாசிரியர்.

60. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்: கண்ணதாசனின் அண்ணன். பொதுவுடைமைப் பிரதிநிதி.

61. சர். சி.பி. ராமசாமி அய்யர். சீனிவாச சாஸ்திரியார்: அரசியல் ஞானிகள். நிர்வாக ஞானிகள்.

62. சூர்யநாராயண சாஸ்திரியார், தேவநேயப் பாவாணர். பெருஞ்சித்திரனார்: தனித்தமிழ் இலக்கியச் செம்மல்கள்.

63. கிருபானந்த வாரியார்: தமிழ்க்கடல் ஆன்மீகக் கடல். அருணகிரி நாதரின் அவதாரம்.

64. ம.பொ.சி. சிலம்புச் செல்வர். அற்புதச் சொற்பொழிவாளர்.

65. G.D. நாயுடு. தாமஸ் ஆல்வா எடிசனின், தமிழ்ப் படைப்பு.

66. சிங்காரவேலு முதலியார், ஜீவா தமிழ் நாட்டின் அரிவாள்-சுத்தியல்.

67. காஞ்சி ஆச்சார்யாள், ரமண மகரிஷி, ஞானானந்த சுவாமிகள், பாம்பன் அடிகள் - ஆன்மீக வித்துக்கள். உண்மையான துறவிகள். ஞானிகள்.

68. தண்டபாணி தேசிகர் - தமிழ் இசை விற்பன்னர்.

**இன்று நம்மிடை வாழும் தலைசிறந்த தமிழர்**

| | | |
|---|---|---|
| சிறுகதை, நவீனம் | - | ஜெயகாந்தன், சுஜாதா, பாலகுமாரன், சிவசங்கரி, சமுத்திரம், திலகவதி |
| சினிமா | - | சிவாஜி, கமல், மணிரத்னம், பாரதிராஜா, பாலச்சந்தர் |
| விஞ்ஞானம் | - | M.S. சுவாமிநாதன், அப்துல் கலாம், சிதம்பரம் (AEC Chairman) |
| அரசியல் | - | கலைஞர் கருணாநிதி, சி. சுப்ரமணியம், ப. சிதம்பரம் (Finance Minister) மூப்பனார் |

www.tamilarangam.net

| | |
|---|---|
| பத்திரிக்கை | – விகடன் ஆசிரியர் பாலசுப்ரமணியம், தினத்தந்தி சிவந்தி ஆதித்தன் |
| விளையாட்டு | – விஸ்வநாதன் ஆனந்த், குற்றாலீஸ்வரன், விஜய் அமிர்தராஜ் |
| ஆன்மீகம் | – ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் |
| சமுதாயத் தொண்டு | – Exnora- M.B. நிர்மல், M.S. உதயமூர்த்தி |
| சிற்பம் | – கணபதிஸ்தபதி |
| ஓவியம் | – மணியம் செல்வன், ஆதிமூலம், அமுதோன் |
| இசை | – M.S. சுப்புலட்சுமி, இளையராஜா, A.R. ரகுமான் |
| கவிதை | – வைரமுத்து, அப்துல் ரகுமான், மேத்தா, நா. காமராசன், சுரதா |
| தொழிற்சாலை | – Spic Muthia Chettiar, TVS, சிம்ஸன் சிவசைலம், நா. மகாலிங்கம் |
| நாட்டியம் | – பத்மா சுப்ரமணியம், சித்ரா விஸ்வேஸ்வரன், அலர்மேல் வள்ளி |
| புத்தக வெளியீடு | – வானதி திருநாவுக்கரசு, பாரதி பதிப்பகம், கன. முத்தையா, பாரி நிலையம், சைவசித்தாந்த நிலையம் |
| அரசியல் விமர்சனம் | – சோ, ஏ.என். சிவராமன். சின்ன குத்தூசி |
| வணிகம் | – V.G.P., AVM, சரவணா, MGM |
| மருத்துவம் | – B. ராமமூர்த்தி (Neurosurgeon) லோக முத்துக்கிருஷ்ணன் |
| கல்வித்துறை | – வி.சி. குழந்தைசாமி, M.அனந்த கிருஷ்ணன், வெங்கட சுப்ரமணியம் |
| சட்டம், ஆட்சி | – T.N. Seshan, R.வெங்கட்ராமன், மலைச்சாமி |
| தமிழறிஞர்கள் | – அ.ச.ஞா. அவ்வை நடராசன், சிலம்பொலி செல்லப்பன் |
| பட்டிமன்றப் பேச்சு | – சாலமன் பாப்பையா, லியோனி, சத்தியசீலன் |
| நாட்டுப்புறப் பாட்டு | – திரு. குப்புசாமி, திருமதி டாக்டர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் |

*(ஒவ்வொரு துறையிலும் பலர் சிறந்து விளங்குவதால் பின்பகுதி சிறுமாற்றம் செய்யப் பட்டுள்ளது)*

## 'சர்வதேச தமிழர்'

**கவியரசு நா. காமராசன்**

சர்வதேச தமிழரென்று சொல்லுங்கள் – நல்ல
சட்டதிட்டம் வைத்தெழுந்து நில்லுங்கள்.

கர்வத்தோடு வீரம் கொண்டு துள்ளுங்கள் –
கட்டளைக்கு வெல்லும் ஆற்றல் உண்டென்று
சொல்லுங்கள்
நிற்பதற்கும், குனிவதற்கும், நிமிர்வதற்கும்
ஆணையிட்ட வீணரை
நின்றெதிர்த்து வென்றுவிட்டு ஒன்றுபட்டு
நீளநீள ஊர்வலம்போல் திக்குகளைத் தட்டுங்கள்
வீரமென்றும், ஈரமென்றும் வெற்றி பெற்ற கூட்டமே
விண்தடவும் மண்முயற்சி வெல்கவென்று கூத்திடு !
புதிய புதிய அறிவையெல்லாம் கண்டு கண்டு
நாட்டிலே
பொன்னுலகைச் சமைக்க வேண்டும்
பொலிவுடனே வாருங்கள் !


□ □ □

## சிம்பாலிசம்

*ஒருவர் : ஏன் டாக்டர் இப்படி ஆபரேஷன் தியேட்டரில் இருந்து வெளியே வந்து ஊஞ்சல்ல உட்கார்ந்து சீரியஸ்ஸா ஆடிக்கிட்டு இருக்கிறார்.*

*மற்றவர் : அவர் ஆபரேஷன் செய்த பேசண்ட் உயிர் ஊசலாடிகிட்டு இருக்குன்னு சிம்பாலிக்கா காட்டிகிறார்.*

**–நன்றி : விகடன்**




All Distances are from Kodaikkanal

**தாய்த்தமிழகம்**



தமிழத தேசிய ஆவணச சுவடிகள

www.tamilarangam.net

## பேட்டி: வல்வெட்டித்துறை: பா. பாலேந்திரன்

**ஆசிரியர் :** உங்களைப் பற்றிக் கூறுங்கள்?

**பாலேந்திரன் :** நான் இலங்கையின் யாழ் மாவட்டத்திலுள்ள, வல்வெட்டித்துறை என்கிற ஊரில் 11.07.64ல் பிறந்தேன். 12 ஆண்டுகள் படிப்பை முடித்து விட்டு, திரை கடல் ஓடித் திரவியம் தேடும் ஆசை முளைத்தபோது, மாலுமி (SEAMAN)யாகி ஆசிய, ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ள பல நாடுகளைத் தரிசித்து விட்டு, எனது ஐந்தாம் ஆண்டு மாலுமி வாழ்வில் ஒரு நாள் நார்வேயிற்குள் நுழைந்தேன்.

ஊரில் இருந்த காலங்களில் கையெழுத்துப் பத்திரிகை நடத்துதல், நாடகம் நடிப்பது என்பன எனது பொழுது போக்குகளாக இருந்திருக் கின்றன. ஆனால் நோர்வேயிற்கு வந்த இந்த இரண்டு வருடத்துக்குள்ளும், எல்லோரையும் போல் என்னுள்ளும் எனது பொழுது போக்குகளிலும் கூட நிறைய மாற்றங்கள்.

எனக்குப் பிடித்த வர்ணங்கள் பட்டர் கலர், மேகப்பச்சை, பிராணி-முயல், மிருகம்-குதிரை, பறவை-புறா, மலர்-மல்லிகை, நடிகர்கள் -கமல், ரமேஷ்அரவிந்த், நடிகைகள்- சுஹாசினி, கீதா.

எந்தக் காலத்திலும் எனக்கு மிகவும் பிடித்தமான விடயம் - மனிதநேயம்!

**ஆசிரியர் :** எத்தகைய மாற்றம் உங்கள் சமூகத்துக்குத் தேவை என கருதுகிறீர்கள்?

'Betterment of the society through individual awakening' சமுதாய மேம்பாடு என்பது ஒரு கூட்டு முயற்சி என்றாலும்கூட தனி மனிதனின் விழிப்புணர்வு என்பது அளப்பரிய ஆற்றல் மிக்கது. அடிப்படையானது.

**ஆசிரியர் :** நீங்கள் வாழும் இட பிறமொழி சமூகங்கள் பற்றி உங்கள் கருத்து, உறவு...?

• நான் நோர்வேயிற்கு வந்த ஆரம்ப காலத்தில், அவிழ்த்துப் போட்டுத் திரிகின்ற இந்த மனிதர்களின் கலாச்சாரம் பற்றி ஒரு அரைகுறைத்தனமான அபிப்பிராயமே இருந்தது. நாள்ப்பட நாள்ப்பட அவர்களது இயல்பான வாழ்க்கை முறையின் பல பாங்குகள் என்னை ஈர்த்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஐந்து பேரும் உழைப்பவராய் இருந்து, ஐவரும் உணவகம் போய்விட்டு, ஒருவர் மட்டும் ரசீதுக்குப் பணம் செலுத்திவிட்டு வீடு திரும்புகையில் நட்பு பாதிக்கப்படக்கூடாது. அப்பொழுதுதான் அது உண்மையான நட்பு என்று வரட்டுத்தனமாகப் பேசிப்பழகிய என் போன்றவர்களுக்கு இங்கு நோர்வேயில் உணவகம் செல்லும் நண்பரிருவர். உண்டு களித்த செலவை, ஆளுக்குப்பாதி என்று பங்கிட்டுக் கொண்டு வெளியேறுகையில், 'உன் வரவு உன்னது, என் வரவு என்னுடையது என்பதைப் போல் செலவும் அப்படியே இருக்கட்டும் என்ற விழிப்பு, நட்பில் ஒரு புழுக்கத்தை ஏற்படுத்தாமல் பாதுகாக்கும் என்பது சாஸ்வதம்.

அடுத்து, ஆண் பெண்களுக்கிடையிலான ஒழுக்கநிலை பற்றிய கருத்துக்களுக்கும் ஆளுக்கு ஆள் வேறுபடலாம்.

ஒரு சமூகத்தின் ஒழுக்க முறை என்பது அந்த சமூகத்திற்கே உரியவை. அதை இன்னொரு சமூகத்துடன் ஒப்பிட்டுப் பழிப்பதோ அல்லது பேதம் காண்பதோ புத்திசாலித்தனம் இல்லை. இது இவர்களின் வாழ்க்கை முறை, இது எங்களின் வாழ்க்கை முறை என்கிற கோடு கிழித்து இரண்டையும் வெவ்வேறு நிலையில் வைத்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு முனிவரின் மனைவியாகப்பட்ட ஒருத்தி சிறந்த கற்புடைய பெண்ணாம். தினமும் ஆற்றங்கரை சென்று, தனது கற்பின் திறத்தால் மண்ணைத் தொட்டுப் பானை செய்து, அதில் நீர் மொண்டு வருவது வழக்கம். அன்றும் அவ்விதம் நீர் கொண்டு வர ஆற்றங்கரைக்குச் சென்றிருந்த போது, வானவீதியில் உலா சென்று கொண்டிருந்த இந்திரனின் நிழல், நீரிலே பிரதிபலிக்க, "ஆஹா, என்ன சௌந்தர்யம்?" என வியந்தாளாம். அவளால் பானையை வனைய முடியவில்லை. அவள் அவ்விதம் வியப்பெய்தியதனாலேயே கற்பினின்றும் விலகியவளாகக் கருதப்பட்டு, தந்தையின் சொற்படி அவளது மகனே அவளது தலை கொய்த கதை - பரசுராமர் கதை!

கற்பொழுக்கம் என்பது மனத்தால் கூட மாசுபடக்கூடாது என்பது நமது மரபு. ஆனால், இது எந்த அளவிற்கு நடைமுறை சாத்தியம்? மரபு என்பதும் மாறுபடுகிற விடயம்தான். நாளை இன்னும் மாறலாம்?

நான் தொழில் செய்யும் இடங்களில் நான்கைந்து நோர்வேஜியர்களைத் தெரியும். சகோதர உறவுடனும், தாய்மைப் பாசத்துடனும் பழகுகிற இருவரைத் தெரியும்.

www.tamilarangam.net

**ஆசிரியர் :** உங்கள் நாட்டு அரசியல் பற்றியும் எப்படியான மாற்றம் முன்னேற்றத்திற்கு வழி தரும் எனவும் கருதுகிறீர்கள்?

'அதிகாரம் பயன்படுத்த வன்முறை அவசியமில்லை.

மனச்சாட்சிப்படி நடக்க பணிவு தேவையில்லை.

மனச்சாட்சிப்படி அதிகாரத்தைப் பயன்படுத்துவதுதான் பலனளிக்கும் செயல்.

-இது 'பார்பரா டெமிங்'கினது வைர வரிகள்.

**ஆசிரியர் :** மத உறவுகள் எப்படி? மனித நல்வாழ்வுக்கும், மேம்பாட்டுக்கும் மதம் உதவுகிறதா? மனித உறவை மதம் கூட்டுமா?

அடிப்படையில் எல்லா மதமும் ஒன்றேயானாலும், அதனுடைய வழி முறைகளும், கட்டுப்பாடுகளும் வெவ்வே றானவை. இதனால் ஒன்றை மற்றொன்று மறுதலிக்கிறது. 'நீ வேறு, நான் வேறு என்கிற பிரிவினை வருகிறது. வரிந்து கட்டிக்கொண்டு யுத்தத்திற்கு இறங்க, மதம் வன்முறையாகிறது. வெறுத்துப்போன ஒரு இந்தியக் கவி.

**"வேதத்தைக் கட்டிக் கொண்டு நீங்களே அழுங்கள்**
**சாதத்தை மட்டுமாவது எங்களுக்குக் கொடுங்கள்"**

என்று கதறுகிறான்.

இது தவிர, "எங்கள் மதத்திற்கு வாருங்கள்' என்று வளைக்கிற மனிதர்களைச் சந்திக்கும் போது, மதம் என்பது திணிக்கப்படுகிற ஒன்றாகிப் போனதே என்கிற வேதனை வருகிறது. திணிக்கப்படுகிற எதுவும் துப்பப்படும். உணரப்படுவதுதான் உறுதியாய் நிற்கும்.

மனித நேயம் ஒரு மதமாக இருக்கக் கூடாது என்கிற ஏக்கத்தில்தான், என்னுடைய ஒவ்வொரு கடிதத்தின் ஆரம்பத்திலும் பிள்ளையார் சுழி போடாமல் 'அன்பே தெய்வம்' என்று எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**ஆசிரியர் :** ஆண்-பெண் சமத்துவம் பற்றி?

* இன்றைய சனத்தொகையில் சரி பாதி பெண்களாய் இருந்தும் கூட, முக்கால் வாசிக்கு மேல், அல்லது அதற்கும் மேல் அரசியல் பிரதிநிதிகள், நீதிபதிகள், இராணுவத்தினர், விமான ஓட்டுனர்கள் என்பவர்கள் ஆண்களாகவே இருப்பதைப் பார்க்கும் போது, சமத்துவம், என்கிற சொல் இன்னமும் ஊனப்பட்டிருப்பது புரியும். ஆனாலும் Women liberation சிறப்பாகவுள்ள நோர்வே நாட்டில் இருந்து கொண்டு, அதை எமது சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அபத்தமாய்த் தெரிகிறது. ஆனாலும் கூட புலம் பெயர்ந்துவிட்ட மக்களால் இந்த சமத்துவப் போக்கு சற்று மேம்பட்டு வருவதையும் மறுப்பதற்கில்லை. சிற்சில இடங்களில் இந்தப் போக்கை ஆண் ஆதரித்தாலும் பெண்ணால் முடியவில்லை! ஒரு பெண் இதமாக உடுத்தி, சுதந்திரமாக வெளியேறி நடந்தாலே இன்னொரு பெண்ணால் சகித்துக் கொள்ள முடியவில்லை. "அவளுக்கென்ன ஆடிக் கொண்டு திரிகிறாள்" என்கிற குத்தல். பெண்ணுக்குப் பெண்தான் எதிரி என்பது என் ப்ரிய எழுத்தாளன் பாலகுமாரனின் கருத்து.

எமது நாட்டின் அநேக பள்ளிக் கூடங்களில் "நீ ஆண் நான் பெண்" என்று கதிரை மேசைகளைக் கூடத் தள்ளிப் போட்டுப் படித்து வந்திருக்கிறோம். இந்த சமத்துவமற்ற அத்திவாரம் எமது பாடசாலைகளிலேயே போடப்பட்டு விட்டது. வீட்டிற்கு வந்தால் ஆண் பிள்ளைக்கு அவித்த முட்டை தந்து சீராட்டும் அம்மா, தங்கைக்கு ரசமும் சோறும் போதும் என்பாள். பிறப்பால் பெண்ணாக இருந்தும் தங்கை என்கிற பெண்ணை, சமத்துவமற்ற நிலையில் வைத்துச் சீராட்டுவது அம்மா என்கிற பெண்!

ஆணின் அடக்கு முறை பற்றி ஒன்றுமே இல்லையா என்பீர்கள்? இல்லாமல் என்ன? ஆனால், அடக்கு முறையைச் சகித்துக் கொண்டு, சிறையிருக்கும் நிலை, புலம் பெயர்ந்து வாழும் மக்களைச் சிந்திக்க வைத்திருப்பது உண்மை.

எமது சமூக அமைப்பில் ஆண் காபந்து பண்ணுபவனாகவும், பெண் காக்கப்படுபவளாகவும் இருந்தாள். அதற்கு பொருளாதாரத்தால் ஏற்பட்ட சார்ந்து நிற்கும் நிலையும் ஒரு காரணம். நோர்வே போன்ற நாடுகளில் யாரையும் கை நீட்டி அடிப்பது குற்றமாகக் கருதுவதாலும், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்தாலும், ஆண்களுக்கு உள்ளூர ஒரு பயம் உதித்திருப்பது வாஸ்தவம். இந்தப் பயம் கூட ஆரோக்கியமானது தான் வேறென்ன சொல்ல...?

**ஆசிரியர் :** உங்கள் பிறநாட்டு அனுபவங்களும், நாம் அவற்றிலிருந்து கற்க வேண்டியவைகளும்?

அனுபவம் என்று சொல்கிறபோது, கண்ணதாசனின் உருவகக் கதை ஒன்றுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞாபகத்திற்கு வருகிறது. 'இருவர் தாஜ் மஹாலைத் தரிசிக்கச் சென்றானாம். ஒருவன் அங்குள்ள அதிசய காதல் சின்னமான தாஜ்மஹாலைத் தரிசிக்க, மற்றையவன் அங்குள்ள நாற்றமடிக்கும் கூவப்பிரதேசத்தை தரிசித்து வந்தானாம். போன இடம் ஒன்றானாலும் கிடைத்த அனுபவங்கள் வெவ்வேறாகி விடுகின்றன என்றார்.

பிற நாடுகளில் என்னுடைய பார்வையில் கிடைத்த அனுபவமும், அதே இடங்களில் நீங்கள் யாரேனும் இருந்திருந்தால், அங்கு உங்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய அனுபவமும் வெவ்வேறாக இருக்க நேர்ந்தால், "இதனால் யாவர்க்கும் தெரிவிப்பது என்ன வென்றால்" என்று நான் பேரிகை அறைந்து கூறப்புறப்படுகின்ற விடயம் பயனற்றதாகிப் போகலாம்.. தவிரவும், ஒருவன், தான் இன்ன, இன்ன அனுபவமெல்லாம் பெற்றேன் என்று சொல்கிறபோதே கர்வம் வராமல் இருக்க வேண்டும். இனிபபுக்கு இன்ன சுவை என்பதும், கசப்புக்கு இன்னது என்பதும் நீங்களாக உண்டு பார்த்தால்தான் பூரணமாக உணர முடியும். வார்த்தைகள் பாதியைத்தான் காட்டும்.

□ □ □

## கவிதை

உட்கார்ந்து எழுதுவது
ஒருபோதும் கவிதையல்ல.

உள்ளத்து உள்ளது கவிதையா ?
இல்லை

உள்ளத்தின் துள்ளல் கவிதையோ ?
இல்லை

உள்ளத்தின் தும்மல் கவிதை !
சபாஷ்

– வ. மாசிலாமணி.



மகாபலிபுரம்

## பிற்பகல் விளைந்த நற்பயன்

ஆரையம்பதி க. சபாரத்தினம்

நாய்கள் ஊளையிடும் சத்தம் அந்தத் தெரு முனையில் கேட்டுக் கொண்டிருந்தது. நிசப்தமான அந்த அமாவாசை இரவில் தூரத்தே ஒரு சோடி ஆந்தைகள் விட்டுவிட்டு அலறும் உறுமல் பொன்னம்மாவின் காதுகளுக்கு என்னவோ செய்தது.

"தூ! குஞ்சு வெச்ச முட்ட கூழாப்போ" என்று துப்பியவாறு நாளைய பகல் சோற்றுக்கு அரிசி புடைப்பதில் அக்கறையுடன் கந்தல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஆராருக்கு கிரணம் ஒழிஞ்சோ, கடவுளே!" படுக்கையில் சாய்ந்தவாறே பதிலுக்குப் பெருமூச்சொன்றை எறிந்து விட்டு, தோளில் கிடந்த ஆட்டுக்குடல் துவாயை மணல் பரப்பில் விரித்துக்கொண்டு அதன் மீது மல்லாந்து சாய்ந்து விட்டான் வேலன்.

அந்தக் கோர இரவை இப்போது நினைத்துப் பார்த்தாலும் அவன் உள்ளம் பதறுகிறது. பாழாய்ப்போன அந்தப் படு பாதகர்கள் துடிக்கத் துடிக்க... ஐயோ! அவனால் அதனை மீட்டுப் பார்க்கக் கூடத் தைரியமில்லை.

கண்கள் பனித்தன. விசும்பும் ஒலி மட்டும் மெல்லிதாக நிசப்தத்தை ஊடறுத்துச் சென்று கொண்டிருந்தது.

வானத்தே பூத்துக் குலுங்கிய விண்மீன் களும் நட்சத்திரங்களும் கண்களைச் சிமிட்டி சாடை காட்டி அவனுக்கு ஆறுதல் கூறின.

மூன்று வருடங்களுக்கு முன்னால் நிகழ்ந்து போன கெட்ட கனவு போன்ற அந்தச் சம்பவம் இன்றும் அவன் உடலை உறுத்தி வருத்தியது.

அப்போதுதான் தொழிலுக்குப் போய் வீடு திரும்பிக் கொண்டிருந்த பொன்னம்மாவின் மகன் வேலனை மதகடிச் சந்தியில் நின்று பரிசோதனை நடத்திக் கொண்டிருந்த *ஆமிக்காரர்கள் விரட்டிப் பிடித்த போது அவன் எதுவுமே செய்யத் தோன்றாமல் விழித்ததைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. மின்னாமல் முனங்காமல் கைகள் இரண்டையும் கட்டி ஜீப்பினுள் தூக்கி வீசி எறியப்பட்ட போது விலாப் பக்க எலும்பு முறிந்து "மடார்" என்ற

* இராணுவத்தினர்

www.tamilarangam.net

சத்தம் கேட்டது. பின்னர் நடந்த வேறு எதனையும் அவனால் உணர முடியவில்லை. மூர்ச்சை தெளிந்த போது விசித்திரமான அனுபவங்கள் காத்திருந்ததை பாவம் உலகம் புரியாத அந்த அப்பாவி வேலன் எங்கே அறிந்திருக்க முடியும்?

கண்கள் இரண்டு மட்டும் மின் குமிழ்கள் போல் மின்ன, உடல் முழுவதையும் கறுப்பு அங்கியால் போர்த்து மூடப்பட்டிருந்த ஒரு முண்டம் தூரத்தில் இருந்து பார்த்து சைகை மூலம் ஏதோ வெளிப்படுத்தியது தெரிந்தது.

அன்று பகற் சாப்பாட்டிற்குப் பிறகு தண்ணீர் கூடப் பருகியிருக்காத அவனது உடல் பலவீனத்தால் நடுங்கியது. "வரும்போது வழியில் வாங்கிய புழுங்கல் அரிசிப் பொட்டலமும் களையான் கருவாட்டுக் கீலமும் என்ன ஆனதோ! தினமும் அவனது வருகைக்காகக் காத்திருந்து அதன் பிறகே அன்றைய உணவைச் சமைத்து உண்ணும் பொன்னம்மா, மகனைக் காணாமல் எவ்வாறு தவித்து ஏங்குவாளோ! அவள் கூட பசியால் வாடி நோவாளே! இங்கே என்னைக் கட்டி இழுத்துக் கொண்டு வருவதற்கு நான் செய்த குற்றம்தான் என்ன?"

பலவாறு சிந்தித்து நொந்து கொண்டிருந்த போது இரும்புக் குழாயுடன் வந்து கொண்டிருந்த ஒரு ஆமிக்காரன்,

"அடோ! நீ தானே புலிக்கு சாமான் சப்பிளை பண்ற ஆளு?" என்று கேட்டுக் கொண்டே அந்த குழாயால் ஒரு போடு போட்டான். அந்த அடி விழுந்த போது வேலனுக்கு சர்வ உலகமும் தன்முன்னே மின்னலாகத் தோன்றி மறைந்தது. சமாளித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றபோது மற்றொரு ஆமிக்காரன் ஓடிவந்து காலால் ஓங்கி ஒரு உதை இடுப்பில் போட்டதுதான் தாமதம். "அம்மா" என்று அலறியபடியே நிலத்தில் சாய்ந்து விட்டான். அதன்பிறகு அவனது நகங்கள் யாவும் பிடுங்கி எடுக்கப்பட்டன. உடல் முழுவதும் சவர அலகால் வெட்டி, வெட்டி சித்திரவதை செய்யப் பட்டான். உடலில் மின்சாரம் பாய்ச்சப் பட்ட போது ஈயம் உருக்கி வார்த்ததுபோன்று உழன்று விட்டான். இரும்புக் கம்பியை மலவாசல் வழியாக உள்ளே நுளைத்து எடுத்தபோது அவன் பட்ட வேதனை ஐயோ! சொல்லும் தரம் அல்ல. இத்தனை வதைகள் செய்தபோதும் இன்னும் உயிருடன் இருப்பது அவனுக்கே வியப்பாக இருந்தது!

"சொல்லுடா சொல்லு! நீ பயங்கரவாதி தானே?"

"ஐயா நான் பயங்கரவாதியே இல்ல. அன்றாட தொழில் செய்யும் பாட்டாளி."

"பொய் சொல்ல வாணா. எங்கிளுக்கு எல்லாம் தெரியும். சின்னாண்ட மகன் சொல்லுறான் நீ பயங்கரவாதிக்குச் சோறு சமைச்சி போட்ட என்று."

"ஐயோ கடவுளே! இது என்ன அநியாயம். கஞ்சிக்கே வழி இல்லாத நான் சோறு சமைச்சி குடிக்கிற தெப்படி? ஆரோ பொய் சொல்லி இருக்கான் ஐயா."

மீண்டும் அடி உதை!

"ஏய் வேலன்! நீ பயங்கரவாதி எண்டு ஒத்துக்கிட்டா அடிவிழாது. கையெழுத்த வை."

"ஐயா! நான் உண்மையைச் சொல்லுறன். என்னை நம்புங்க. எனக்கும் இதுக்கும் சம்பந்தமே கிடையாது."

"அடோ! எதிர்த்து பேசுற?" ஓங்கி அறைந்த விசையில் முன் பற்கள் இரண்டு கழன்று "கலீர்" எனத் தெறித்தது. இரத்தம் பெருகி ஓடியது. அதன் அதிர்ச்சி தீருமுன்பாக அங்கு நிகழ்ந்த மற்றொரு சம்பவம் வேலனை திடுக்கிட வைத்தது.

கைகள் இரண்டையும் சேர்த்துப் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் இரத்தம் ஓடிக் காய்ந்து ஈக்கள் மொய்க்கும் காயங்களோடு 'யார்' என்றே இனங் கண்டு கொள்ள முடியாதபடி இருந்த ஒரு இளைஞனை இழுத்து வந்தார்கள். மேலே கப்பியில் சங்கிலியில் தொங்கவைத்து விட்டு பொல்லாலும் தடியாலும் இரும்புக் குழாய்களா லும் மூன்று ஆமிக்காரர்கள் நின்று மாறி மாறி தவிட்டுச் சாக்கில் அடிப்பதுபோல் வெளுத்து வாங்கினார்கள்.

அப்போது அந்த நிகழ்ச்சி, களப்பொலி கூட்டி விட்டு எட்டுப் பேர் நின்று வாரிக் கம்பால் உப்பட்டிக்கு அடிப்பது போன்று வேலனுக்கு ஒரு பிரமை தோன்றியது.

பயங்கர சித்திரவதை தொடர்ந்தபோதும் அவ்வுருவம் ஏனோ அவதிப்படவோ அழுது புலம்பி ஆர்ப்பரிக்கவோ கூட இல்லை. சலன மற்றிருந்த அந்த இளைஞனைப் பார்க்க வேலனுக்கு பரிதாபமாக மட்டுமல்ல – ஆச்சரிய மாகவும் இருந்தது.

www.tamilarangam.net

அரைமணித் தியாலத்திற்கு மேல் தொடர்ந்த அந்த வேட்டைத் திருவிழாவை அடுத்து, நன்றாக குடிபோதை ஏறி இருந்த ஒரு படைவீரன் அப்பால் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து படார்... படார்... படார்...

மூன்று வேட்டுக்களில் ஓர் ஆத்ம பயணம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

அந்தப் பயங்கர இரவு முழுவதும் வேலன் மட்டும் தனியாகவே அங்கே முடங்கிக் கொண்டு பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருக்க, கப்பியில் பிணமாக ஊசலாடிக் கொண்டிருந் தான் அவ்விளைஞன்.

''பாவம்! ஆரார் வயிற்றுப் பிறந்த பரிதாபத்திற்குரிய ஆத்மாவோ'' வேலனின் அன்புள்ளம் பச்சாதாபப் பட்டுக் கொண்டது.

அதிகாலையில் வந்த இரு ஆமிக்காரர்கள் கப்பியில் தொங்கிக் கொண்டிருந்த பிணத்தை நிலத்தில் வீழ்த்தி பொலித்தீன் சாக்கொன்றில் போட்டுக் கட்டி அப்புறமாக இழுத்துக் கொண்டு போனார்கள்.

சிறிது நேரத்தில் தீச்சுவாலை டயர்களில் கனன்று எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பினூடே அவ்விளைஞனின் உருவம் மலர்ச்சி பெற்று எழுந்து சிரித்து கேலி பண்ணுவது போன்று வேலனின் நெஞ்சிலே நிழலாடியது.

"அடோ! நேற்று மண்டையில் ஒண்டு போட்டது. பொய் சொன்னே! இண்டைக்கு நீ போவா."

நடந்து போன ஆமிக்காரன் வேலனை நையாண்டியாகப் பார்த்துப் பயமுறுத்தினான்.

எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்த வேலனுக்கு உடல் பயத்தால் நடுங்கியது. இனி இங்கிருந்து மீண்டு தன் தாயின் முகத்தை ஒரு தடவையேனும் பார்த்து விடுவ தென்பது கட்டுக்கதையாகி விட்டது.

"என் செயலாவது யாதொன்றும் இல்லை. இனித் தெய்வமே" யாரோ ஒருவர் எப்போதோ சொன்ன சமயப் பேச்சு ஞாபகத்திற்கு வந்தது வேலனுக்கு.

வேலனின் சிந்தனையைக் குழப்புமாப் போல் அடுத்து நடந்த நிகழ்ச்சி அதிர்ச்சியைத் தந்தது.

ஏதோ அலுவலாக அந்த வதைக் கூடத்திற்கு வந்த ஓர் ஆமி ஆபிசர் வேலனை பார்த்து விட்டு அப்புறமாகச் சென்று கொண்டிருந்தார். தூரத்தே போயும் வேலனை அவர் குறிப்பாக நோக்குவது தெரிந்தது. பின்பு மீண்டும் வந்து, "ஆ! வேலன்...?" என்றதுதான் தாமதம். கருக்கட்டி இருந்த மேகங்கள் இடியுடன் சேர்ந்து பொழியும் கோடை மழையாக வேலனின் வேதனைகள் விம்மலும் அழுகையுமாக வெடித்துப் பறந்தது. அதிகாரி, "என்ன நடந்தது?" என்று கேட்டது கூட அவன் காதுகளில் விழவில்லை! ஏக்கப் பெருமூச்சாலும் பார்வையாலும் தன் நிலையை விளக்க முற்பட்ட அவனுக்கு வார்த்தைகள் எதுவுமே கிடைக்கவில்லை.

கல்லிலும் ஈரம் பொசியுமா? அந்த அதிகாரியின் கொலை உள்ளத்திலும் கசிவு ஏற்பட்டிருக்க வேண்டும். எதுவுமே பேசாமல் நகன்று சென்றுவிட்டார்!

சில நிமிட நேரங்களில் ஒரு சிப்பாய் வந்து வேலனின் கால் விலங்குகளை அகற்றி இன்முகம் காட்டி அழைத்துச் சென்றான். வேலனை அந்த அதிகாரியின் அறைக் கதவுகளுக்குள் நுழைத்து விட்டு சலூட் மரியாதைகளுடன் வெளியே நின்றும் கொண்டான்.

அதிகாரி கொடுத்த தேனீரை வாங்கிப் பருகினான் வேலன். மூன்று நாட்களாக வரண்டு போயிருந்த நாவிற்கு அது அமிர்தம் போன்று இனித்தது மனித உருவில் இருந்த அவர் வேலனின் கண்களுக்கு தேவதை போன்றே காட்சியளித்தார். கண்கள் அவனை அறியாமலே மாரி பொழிந்து கொண்டிருந்தன.

மூன்று மாதங்களுக்கு முன்பு ஒருநாள்.

வெல்லாவெளி சந்திக்கு அப்பால் ஆமிக்காரரின் பிறக் வண்டி ஒன்று கண்ணி வெடியில் சிக்கியபோது அதில் பலர் உயிர் இழந்தனர்.


மாடுகளைச் சாய்த்துக் கொண்டு மேய்ச்சல் தரை தேடி வாய்க்காலைக் குறுக்கறுத்து நிமிர்ந்தபோது பற்றை மறைவில் இருந்து வரும் முனுகல் சத்தம் வேலனுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியது. காரை மரமொன்றில் மாட்டைக் கட்டி விட்டு மெல்ல மெல்ல ஊர்ந்து நடந்து பார்த்தான். உடலெல்லாம் காயம் அடைந்த நிலையில் ஒரு ஆமிக்காரன் வீழ்ந்து கிடப்பது தெரிந்தது. நடக்க இயலாத நிலையில் அப்படியே சாய்ந்து படுத்துக் கிடந்தான்.

www.tamilarangam.net

மனித உயிர் ஒன்று படும் வேதனையை வேலனால் பார்த்துப் பொறுத்திருக்க முடிய வில்லை. உதவும் அவனது உதாரகுணம் சிந்தனையின் முடிவுக்காகக் காத்திருக்கவில்லை. துரிதமாகவே இயங்கினான். இரு கைகளாலும் அலக்காகத் தூக்கி இருத்த முயன்றான். வாட்ட சாட்டமான அந்த உடல் வேலனின் ஒல்லியான வலுவிழந்த சக்திக்கு அசையவில்லை. மெல்ல மெல்ல மேலங்கியைப் பிடித்து இழுத்து வெளியே எடுத்து விட்டான். வாய்க்காலில் ஓடிய தெளிந்த நீரை கைப்பிடிக்குள் எடுத்துக் கொண்டு வந்து சிறிது ஊட்டி உயிர்ப்பித்தான். சிறிது நேரம் இளைப்பாற விட்டு அவ்வுருவத்தை வாடிக்கு அழைத்துச் சென்று பச்சிலை முகிலிகள் வைத்து காயங்களுக்கு மருந்திட்டான்.

பானையில் இருந்த தயிரைக் கரைத்து உப்பும் மிளகாயும் சேர்த்து ஊட்டி களைப்பைப் போக்கினான். பனை ஓலைப் பாயில் கிடத்தி விட்டு மாட்டை அவிழ்த்து வர மீண்டும் வாய்க்காலடிக்குச் சென்று திரும்பி வந்தபோது ஆமிக்காரனை அங்கு காணமுடியவில்லை. சுற்றுப் புறமெல்லாம் தேடியும் பயன் அளிக்க வில்லை.

அந்தப் பழைய நினைவுகள் அப்போது தான் இருள் பிரியும் காலைப் பொழுதாக அவன் நினைவில் மீண்டு கொண்டிருந்தன.



திருச்சி மலைக்கோட்டை

# தீக்குளிக்காத சீதை புதிய சீதை

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி: 1996

B. சத்திய நாராயணன்

"என் பெயர் சீதா!

வயது நாற்பதுக்குக் கொஞ்சம் கீழே.

சீதா என்ற பெயர் வைத்துக் கொண்டாலே, கஷ்டப்பட்டுக் கொண்டே இருப்பார்களாம். என்னுடைய ஏழாவது வயதில் செத்துப்போன என் அம்மா சொல்லுவார்கள். உண்மைதான்.

என் வாழ்வில் துன்பங்களும் துயரங்களும் தான் மிஞ்சி இருக்கின்றன. தெரிந்தும், அந்தப் பெயரை ஏன் வைத்தார்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

அப்பாவின் பிடிவாதம். அவர் அம்மாவின் பேராம். அது வைத்தே ஆகவேண்டும் என்று சொல்லி விட்டாராம்.

சீதா என்ற பெயர் உள்ள பெண்கள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கொண்டா இருக்கிறார் கள்? எவ்வளோ பேர் சுகமாக ஆனந்தமாக இல்லையா?

என் துன்பங்களின் முதல் காரணம் அப்பாதான். அவரை நினைத்தாலே அருவருப்பு தான் மிஞ்சுகிறது. உலகில் உள்ள அற்ப கெட்ட பழக்கங்கள் எல்லாம் அவருக்கு உண்டு.

புகையிலை, பொடி, பீடி, சாராயம், சீட்டு, இத்தியாதி அதைத் தவிர சரளமாகப் பொய் வேறு. அவர் உடம்பில் ஓர் ஓட்டையைப் போட்டுத் தட்டி விட்டால், ஒன்று போதை வஸ்துவாகக் கொட்டும் அல்லது பொய்யாகக் கொட்டும். அவருடைய திருவிளையாடல்கள் தந்த வேதனை தாங்க முடியாமல்தான் அம்மா இளம் வயதிலேயே போய் விட்டார்.

ஏழு வயதிலேயே குடும்பப் பொறுப்பு என் தலையில் விழுந்தது. அதாவது அப்பாவைப் பார்த்துக் கொள்வது. அப்பாவுக்கு ப்ரோக்கர் வேலை. தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள். லாரி கம்பெனி, டாக்சி, பஸ் என்று பல கம்பெனி களுக்கு ஆள் பிடித்துக் கொடுப்பது. ஏதோ ஐந்து பத்து வரும். அப்படியே பீடிக் கடைக்குப் போய் விடும்.



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் பங்கஜம் மாமி வீட்டில் வேலை செய்து கொண்டே பள்ளிக்கும் சென்று வந்தேன். காலையும், மாலையும் வேலை. பகல் நேரத்தில் பள்ளிக்கூடம். ராத்திரி அப்பாவுக்குச் சமைத்துப் போட்டு விட்டு, மிஞ்சினால் சோறு இல்லா விட்டால் தண்ணீர் என்று குடித்து விட்டுப் படுத்துத் தூங்கி விட்ட நாட்கள் ஏராளம். ஒரு வழியாக எஸ்.எஸ்.எல்.சி முடித்தேன். பங்கஜம் மாமி வீட்டுக்காரரே, ஒரு சோப்புக் கம்பெனியில் சேல்ஸ் வுமனாக வேலை வாங்கித் தந்தார்.

வெயிலில் அலைந்து வீடு வீடாக ஏறி இறங்கி, சோப்பு விற்றுச் சம்பாதித்த பணம் எனக்கில்லை. அப்பா அப்படியே பிடுங்கிக் கொள்வார். வேலைக்குப் போயும் எனக்குப் பட்டினிதான்.

ஆனால் சேல்ஸ் வுமனாக இருந்த என்னை சேல்ஸ் எக்சிக்யுடிவ் ஆக உயர்த்தினார்கள். என் வாழ்க்கையில் நடந்த ஒரே மகிழ்ச்சியான சம்பவம் இதுதான்.

ஆனால் அதை அனுபவிக்க அப்பா இல்லை. அவருடைய 'மைனர்' வீக்னஸ் எல்லாம் மேஜர் வியாதியாக மாறிப் படுக்கையில் தள்ள, கையும் காலும் மரத்துப் போய்ச் சித்திரவதை அனுபவித்து, ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்தார்.

அப்போது என்ககு வயது இருபத்தி ஆறு!

வேலைக்குச் சென்றாகி விட்டது, கையில் சற்றுக் காசு சேர்ந்து விட்டது. பதவியும், பணமும் சற்று கம்பீரத்தையும் தந்து விட்டது.

அடுத்த விஷயம், கல்யாணம் தானே!

"இப்படியே எத்தனை நாளும்மா இருப்பே. ஆண்துணை வேணுமா..?

"கன்னி கழிய வேணாமா...?" மற்றவர் கூறினர். இருபத்தெட்டு வயதில் எனக்கும் கல்யாண ஆசை வந்தது.

தரகர் தம்புசாமி ஒரு அருமையான வரனைக் கூட்டி வந்தார். அம்மாவும் மகனும் காரில் வந்து இறங்கினர். "பையன் கறுப்புதாம்மா. பரவாயில்ல பண்ணிக்கோ."

இருபத்தெட்டு வயதில் வேறு யார் என்னைப் பண்ணிக் கொள்வார்கள் என்ற நினைப்பில் கழுத்தை நீட்டினேன். நாளாக நாளாக அவன் சுயரூபம் தெரிந்தது. சுருக்கமாகச் சொன்னால் "அப்பாவே தேவலை"

தரகர் சொன்னது அத்தனையும் பொய்.

தஞ்சாவூர்ப் பக்கம் 'மிராசோட' ஒரே பிள்ளை என்றார். மிராசோட சின்ன வீடு, இன்னும் சொன்னால் கூத்தியாளோட பையன்.

அவன் மூத்த தாரம் இறந்து மூன்று வருஷமாச்சு என்றார். அவன் தீய பழக்கங்கள் தாங்காமல், அவள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாளாம்.

என் அப்பாவாவது அவர் மனைவி மேல் அதாவது என் அம்மா மேல் ஓரளவு அன்பு வைத்திருந்தார். சாகும்போது அவள் பெயரைப் புலம்பிக் கொண்டே செத்தார்.

இவன் இருக்கிறானே! சொன்னாலே அசிங்கம்! சொந்தப் பெண்டாட்டி. என்னிடம் வந்து விட்டுக் காசு வாங்கிக் கொண்டு செல்வான்.

ஆமாம்! அப்படித்தான் எனக்கு இந்தப் பையன் பிறந்தான். கல்யாணமான புதிதில் எனக்கும் உடல் சுகம் வேண்டியிருந்தது. "காசு கொடுக்கிறியா?" என்று வெட்கம் இல்லாமல் கேட்டு விட்டு, வெறி தணிந்த உடனேயே ரூபாயை எடுத்துக் கொண்டு கள்ளுக் கடைக்கு ஓடின பாவி இவன்.

அது மட்டுமல்ல. காலை நேரத்திலேயே ஆபீசுக்கும் வந்து விடுவான். "காசு கொடுடி..." என்ற அதட்டல் வேறு.

குடி, சீட்டு, ரேஸ் இதைத் தவிர ஊசிப் பழக்கம் வேறு. அவனுக்குப் பிறந்த பையன் எப்படி இருப்பான்..? என் அப்பா ஜனக மகாராஜா இல்லை. என் கணவன் இராமன் இல்லை. என் பையன் மட்டும் லவகுசர்களில் ஒருவனாகவா இருக்கப் போகிறான்.

ஏழு வயதிலேயே பீடிப் பழக்கம். இதோ இப்போதுதான் பத்து வயசாறது. எப்பவும் பீடி, சிகரெட், மூணு சீட்டு. ஸ்கூலுக்கு அனுப்பிப் பிரயோஜனம் இல்லை. திருட்டுப் பழக்கம் இருக்குன்னு வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். இந்த மாதிரி அப்பனோட பையன் எப்படி இருப்பான்?

அத்தனை வேதனையையும் தாங்கிண்டேன்.

ஊதாரி அப்பா, சோம்பேறி புருஷன், பிஞ்சில் பழுத்த பிள்ளை'னு யாராலயும் எனக்கு சுகமில்லை.

'போகட்டும்'னு விட்டுட்டேன்.

www.tamilarangam.net

ஆனா ஒண்ணை மட்டும் என்னால தாங்க முடியல.

வேலைவெட்டி இல்லாம தண்டசோறு திங்கற என் புருஷனுக்கு, தான் ஒருத்தியோட கணவன்ங்கற திமிர் மட்டும் அதிகம். கூடவே ஒரு தாழ்வு மனப்பான்மை வேறே. அடிக்கடி என்னைக் குத்திக் காண்பிப்பான்.

"அவன் கூட என்னடி பேசின? அவனோட என்னடி சிரிப்பு?" என்று.

ஒரு நாள் ஆபீசுக்கு வந்தபோது மேனேஜர் அறையில் பேசிக் கொண்டிருந்தேன். வெளியே வர கால் மணி நேரமாகி விட்டது.

"என்னடி உள்ள... மஜாதான்..." என்றான் நக்கலாக, என் புருஷன்.

லேட்டாக வீட்டுக்குப் போனால் கேட்கவே வேண்டாம். "ஏண்டி ராத்திரி லேட்டு. மேனேஜரோட ஜல்சாவா?" என்று வாய் கூசாமல் கேட்பான்.

ஒருநாள், சாராயம் வாங்கக் காசு தர மறுத்து விட்டேன். அவன் ஆபீசுக்கு வந்து கத்தியதைக் கேளுங்கள்.

"ஏண்டி எனக்கா காசு தர மாட்டேங்கறே. நீ சம்பாதிக்கற பணம் ஒழுங்கா வேலை செய்ஞ்சாடி சம்பாதிக்கற? நீ எவனோட படுத்து சம்பாதிக்கங்கறது எனக்குத் தெரியாதாடி."

இன்னொரு நாள் அகோரமாக சிரித்தவாறு கூறினான். "வேணும்'னா சொல்லுடி. கண்டுக்காம இருந்துடறேன். நான் உன்னைக் கேள்விக் கேட்கறேன்னுதானேடி காசு தர மாட்டேங்கிற. நீ ஏவனோட வேணா படுத்துக்கோடி நான் கண்டுக்கல. காசு மட்டும் என் பங்கைப் பிரிச்சுக் கொடுத்துடி."

என் பொறுமையோட உச்சக்கட்டமா அன்றைக்கு அந்த நிகழ்ச்சி நடந்தது.

அன்றைக்குத் தீபாவளி!

அதற்கு இரண்டு, மூன்று நாட்கள் முன்னால்தான் வெளியூர் கேம்ப் போய் விட்டுத் திரும்பி வந்திருந்தேன். வந்த உடன் அதிர்ச்சியான சேதி காத்திருந்தது. என் பையனை போலீஸ் பிடித்துக் கொண்டு போய் விட்டதாம். காசு வைத்துச் சூதாடும்போது பிடித்து விட்டார்களாம்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினேன்.

"ஏம்மா உங்களைப் பார்த்தா இவ்வளவு கவுரவமா இருக்கீங்க. பையனைச் சரியா வளர்க்கறதில்லையா..." இன்ஸ்பெக்டர் என்மேல் அனுதாபம் கொண்டு விட்டு விட்டார். பையன் அப்பாவை உரித்து வைத்திருக்கிறான் என்று சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை.

வீடு திரும்பி வந்து பார்த்தால் என் அத்தையும் வந்திருந்தார். என்னுடைய துரதிருஷ்டம். ராமாயணத்தில் கண்ட ராமனும், ஜனகரும் என் வாழ்வில் இல்லை. ஆனால் கூனி மட்டும் தவறாமல் வந்து வாய்த்து விட்டாள். அந்த அம்மாவைப் பார்த்தவுடனேயே குமட்டிக் கொண்டு வந்தது எனக்கு. கதைகளில் வரும் சூனியக்காரக் கிழவி அப்படியே நேரில் வந்தது போல இருந்தாள்.

இரண்டு நாட்கள் அலுவலகம் சென்றதால் தப்பித்து விட்டேன்.

தீபாவளியன்று காலை மாட்டிக் கொண்டேன்.

பண்டிகை. கொண்டாட்டம் என்ற எதுவும் வேண்டாம் என்றாலும் மனம் கேட்காமல், வெந்நீருக்காக உலையை வைத்தேன். எண்ணை தேய்த்துக் கொண்டு அடுப்பை ஊதிக் கொண்டிருந்த போது அந்த நிகழ்ச்சி நடந்தது.

கூனி என்ன சொல்லிக் கொடுத்தாளோ தெரியவில்லை. வந்து ஒரு உதை விட்டான்.

"ஏண்டி ஒரு வாரமா எங்கடி போன..."

கோபத்தில் நாக்குழறியது.

ஒரு வாரம் ஆபீஸ் கேம்ப் விஷயமாக மதுரை போயிருந்தேன். அதைத்தான் சொல்றான்.

"அவ ஏண்டா சொல்லப்போறா. தே.." என்று அத்தை திட்டினாள். அவள் பாஷை வெளியே வந்தது.

"ஆபீஸ் வேலையாவா போன.. மேனேஜரோட போய் ஜல்சா பண்ணிட்டு..."

அம்மா, மகன் இருவருக்கும் தீபாவளிக் காக நூறு நூறாய்த் தரவில்லை என்ற கோபம். திட்டித் தீர்த்தார்கள்.

பேசாமல் இருந்தேன்.

அந்த நேரம் பார்த்து என் பையன் வந்தான்.

"பையன் வர்றான் பாரு. ரௌடியாட்டம்" அம்மா கூறினாள்.

"போலீஸ் ஸ்டேஷன் போனானாமே. காலிப்பய..." மகன்.

www.tamilarangam.net

அடுத்த வார்த்தை என் சினத்தைத் தூண்டி விட்டது.

"யாருக்குப் பிறந்தவனோ! எங்க பரம்பரையில யாரும் இப்படி இல்லடா..." அம்மா கூறினாள்.

"என்னடி முறைக்கிற. ஆபீஸ்'ல நீ பண்ற ஜல்சா தெரியாதா. எவனுக்குப் பிறந்தானோ இவன்..."

அம்மாவும், மகனும் என்னை நெருங்கினர்.

"அப்படியே நெருப்புல தள்ளுடா. தே... சாகட்டும்..."

நிலைமையின் விபரீதத்தை நொடியில் உணர்ந்து கொண்டேன். என் வழக்கமான சாதுக்குணமும், சாந்தமும் இன்னும் ஒரு வினாடி இருந்திருந்தால் எண்ணை பூசிய என் உடல் அடுப்பில் விழுந்து பொசுங்கியிருக்கும்.

முப்பத்தைந்து வருடங்களாக நான் பட்ட துன்பங்கள் பீறிட்டு வெளியே வந்தன. அப்பாவிடம் பட்ட அடி உதை, புருஷன் வாய் வார்த்தையாலேயே சுட்டது, காலித்தனமே உருவான பையன் என்று கஷ்டங்கள்தான் மிச்சமா?

அப்படியே அச்சில் வார்த்தெடுத்தது போல தன்னுடைய நீசத்தனத்தையெல்லாம் பிரதிபலித்துக் கொண்டு பிறந்த மகனை 'யாருக்குப் பிறந்தவனோ' என்கிறானோ மகாபாவி. அதற்குத் துணையாக அவனுடைய அம்மா...

அடுப்பில் கொழுந்து விட்டெறியும் இரண்டு விறகுக் கட்டைகளை எடுத்தேன். ஒரு கட்டை அவனுடைய கையின் மேலே பட்டது. 'ஆ' என்று அலறிய படி வாயைத் திறந்தான். நாக்கில் நரம்பில்லாமல், என் பெண்மையை இழிவாகப் பேசிய அவன் வாய்க்குள்ளேயே விறகுக் கட்டையைத் திணித்தேன். பெரிய நெருப்புத் துண்டம். அவன் நாவையும் முகத்தையும் பொசுக்க அப்படியே விழுந்தான். இன்னொரு கொள்ளைக்கட்டையால் அவன் அம்மாவின் மேல் ஆத்திரம் தீரும் வரை சூடிமுத்தேன்.

பையன் ஓடி வந்தான்...!

இரண்டு கொள்ளிக் கட்டைகளையும் அவன் முன் நீட்டினேன்.

"அம்மா..." என்றான்.

தூக்கிக் கீழே போட்டு விட்டு குலுங்கக் குலுங்க அழுதேன். அக்கம்பக்கத்தவர் ஓடி வரும் சப்தம் கேட்டது.

"கனம் நீதிபதி அவர்களே. கணவனையும், அவன் அம்மாவையும் கொழுந்து விட்டெறியும் நெருப்பால் தாக்கியதாக என்னைக் கூண்டில் ஏற்றியிருக்கிறீர்கள். வாயிலும், முகத்திலும் நெருப்புக் காயத்துடன் என் கணவன், உடலெல்லாம் புண்ணாக அவன் அம்மா அதோ நிற்கிறார்கள்.

நான் எந்தத் தவறும் செய்ததாக நான் நினைக்கவில்லை. களங்கத்தை சுமத்தி சீதையைத் தீக்குளிக்க வைத்தது புராணக் காலம். நாக்கில் நரம்பில்லாமல் பேசின கணவனின் நாக்கையே தீக்குளிக்க வைத்தது இந்தக் காலம். சட்டத்தின்படி, நீங்கள் எந்தத் தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்..."

□ □ □

## கிளிப்பேச்சு

"சாதாரணமா கிளிதான் நாம் சொல்றதைத் திரும்பச் சொல்லும். ஆனால நீங்க என்னடான்னா இந்தக் கிளி சொல்றதை யெல்லாம் திருப்பிச் சொல்றீங்களே"

"இது என் சம்சாரத்தோட கிளி சார்..."

–நன்றி விகடன்



மகாபலிபுரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத் தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.கிருபா.22.252141;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்.ஐ.றோயலா துரொண்கைம்:த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்:முபாரக் அலி கிறிஸ்ரியன்சாண்ட்:ம.பஸ்ரியன்ஏககண்ட்:பொன்.சிவா:துறம்சோ:கே.சிவராஜா: வார்டோ: குகனெறியப்பன்;பேர்லவோக்:இரா.விஜய்:ஐ.சிரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்.கரன் பிறத்வோக்: குமார் கல்வோக்:கனகசிங்கம்

# தேர்தலுக்கு முன் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

**T.R. கள்ளபிரான்**

நாட்டிலே எங்கே பார்த்தாலும் கருமேகங்கள் சூழ்ந்திருக்கின்ற சூழ்நிலை. நல்லவர் வாழவே முடியாது என்ற நிலை. ஒவ்வொரு தீமையும் அங்கீகாரம் பெற்று வருகின்ற காலம். மாண்புமிகு திருடன், மாண்புமிகு கொள்ளைக்காரன் மாண்புமிகு பெண் பித்தன் என்று எங்கும் மாண்புமிகு பேரழிவு. படமெடுத்தாடும் நேரம். உங்கள் கட்சி அடித்த கொள்ளை 50 கோடியோ, இதோ எங்கள் கட்சி 500 கோடி என்று ஒரு கட்சி கொக்கரிக்க, மற்றொரு கட்சி 5000 கோடி என்று கூவுகிறது. கொள்ளையடிக்காத கட்சியே இல்லை என்பது எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாய்த் தெரியும் போது ஒரு கட்சி இன்னொரு கட்சியைப் பற்றி கூறும் குற்றச் சாட்டுகள் வேடிக்கையாக இருக்கின்றன.

ஒரு சாமானியன், ஒரு நேர்மையாளன், அவன் திறமைசாலியாகவே இருந்தாலும் எம்.எல்.ஏ ஆக சட்டமன்றத்திற்குப் போக வேண்டுமென்றால் பத்து லட்சம் ரூபாய் செலவாகும். பாராளுமன்றத்திற்குப் போக வேண்டுமென்றால் 50 லட்சம் செலவாகும். இவர் எப்படி மறுபடி சம்பாதிப்பார் என்பது சிறு குழந்தைக்குக் கூடப்புரியும்.

நோட்டு விளையாடுவது போக, சாதி, மதம், இனம், போன்ற பிளவு சக்திகளையும் நம் அரசியல்வாதிகள் கொடூரமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

அரசியல்வாதிகளைக் கடுமையாகச் சாடி பல படங்கள் வந்து விட்டன. பல கட்டுரைகள் வெளிவருகின்றன. சின்னத்திரையும் அவர்களை விட்டு வைக்கவில்லை. அவர்களுக்கு உடந்தையாக அதிகாரிகள், காவல் துறை என்று எல்லோருமே தாங்க முடியாத அளவிற்கு அதிகார துஷ்ப்ரயோகம் செய்து வருகிறார்கள். உச்ச நீதி மன்றம் (Supreme court) ஒன்றுதான் மீட்சிக்கு நம்பிக்கை யூட்டுவதாக அமைந்திருக்கின்றது. ஆனாலும் அங்கே ஆகும் கால தாமதம் சரியான சமயத்தில் உதவி வரமுடியாமற் செய்து விடுகின்றது. ஆன்மீக வாதிகள் கூட நிர்வாகத்தில் தலையிட்டு சிபாரிசு செய்து தம்மைப் படித்த பாமரர்களாகக் காட்டிக் கொள்கின்றனர்.

இந்த நிலையில், நேற்று வரை குடுமிப்பிடி சண்டை போட்டுக்கொண்டிருந்த கட்சிகள் கூட்டுச் சேர்வது, கூட்டுக்கொள்ளைக்கு ஆயத்தம் செய்வதைத் தான் நமக்கு இனம் காட்டுகின்றது. நம்மைப் பற்றி என்னதான் நினைக்கிறார்கள் இவர்கள் என்று ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்க வேண்டிய காலகட்டம் இது.

நம்மை ஆள்பவர்கள், நல்லவர்களாயும் நாணயமானவர்களாக நம்பிக்கைக்கு உகந்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது, வெற்றிகரமாக எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் திறமையுடையவர்களாகவும் இருப்பது அவசியம் அப்படி அவர்கள் இருக்கிறார்களா, அப்படி நாணயமாகச் செயல்படுகிறார்களா? என்று எப்போது கணிக்கின்றோம்? அப்படிக் கணித்திருந்தால் இந்த அவலம் வந்திருக்குமா? நாகரீக முதிர்ச்சி பெற்றதாகச் சொல்லும் மேற்கத்திய மற்றும் அமெரிக்க நாடுகளில் கூட, இந்தக் கணிப்பு முறையாகச் செய்யப்படுவதில்லை. அது இன்னும் இந்த ஜனநாயக அமைப்பின் குறையாகத்தான் இருக்கின்றது. ஆனால் ஓரளவு அந்தக் குறையை அயல் நாட்டுப் பத்திரிக்கைகள் தங்களது தனிப்பட்ட விமரிசனங்கள் மூலம் போக்குகின்றன. அவ்வளவே. நாம் சரியான கணிப்புமுறைகளை அறிமுகப்படுத்தி இந்த ஆட்சி முறையைச் செம்மையாய்ச் செயல் படுத்த வழிவகை காணலாமே! அதைத்தான் இப்போது செய்ய வேண்டும். திட்டமிடுதல் (Planning) செயல்படுத்துதல் (Organising) இணைத்து இயக்குதல் (Coordinating) கட்டுப் படுத்துதல் (Staffing) என்ற ஐந்து காரியம் சிறப்புற நடக்க வேண்டுமென்றால் வேண்டிய கருவிகள் என்று மேலாண்மை வல்லுநர்கள் சொல்வார்கள். அதில் "கட்டுப்படுத்துதல்" என்ற செயல் "கணித்தல்" என்பதையும் உள்ளடக்கும் என்று சொல்வார்கள். ஆனால் அந்த கணித்தல் ஆறாவது கருவியாக, செயலாக மிக அதிகமாக சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதே இக்கட்டுரை மூலம் நாம் விடுக்கும் வேண்டுகோள்.

நாம் எடுத்துச் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான பணி. உடனடியான பணி இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன் 181.4270839;ந.பாலமுரளி 181.4729336;திருமதி.த.மனோகரன் 181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190 கனடா:மா.மகிந்தன்:தியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்,பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.2351723316l;பேராசிரியர்.ஐ.இராமச்சந்திரன்

அரசு இயந்திரத்தில் ஒவ்வொரு சிறு பகுதிகளையும் நடத்திச் செல்லும் அதிகாரிகள் சரியாகச் செய்கிறார்களா? என்று கண்காணிக்க மேற்பார்வை (Supervision) சரியாகச் செய்திருக்கிறார்களா என்று சரி பார்க்க ஆய்வு (Inspection) எந்த அளவிற்கு அவர்களுக்கு பதவி உயர்வு, பரிசு கொடுக்கலாம் என்று சொல்லும் மதிப்பெண் அல்லது மதிப்பீடு எல்லாம் இருக்கும் போது, வங்கி அதிகாரிகள், மேலாளர்கள் போன்றவர்களுக்குச் சரியான மேற்பார்வை முறைகள் இருக்கும் போது, இதைவிடப் பல லட்சம் மடங்கு மதிப்புள்ள சொத்துக்களை ஆளும் அரசியல்வாதிகளின் வேலைகளைக் கண்காணிக்க ஒரு வழியும் செய்யாமலிருப்பது எவ்வளவு பெரிய மடமை!

அயல் நாடுகள் கூட இதைச் செய்யது செம்மைப்படுத்தாத அரசியலை, நாம் முன்னே செய்து வழி காட்டலாமே. ஓர் ஓட்டப்பந்தயம் என்றால் எல்லோரும் எவ்வளவுதூரம் ஓட வேண்டும் என்று முன்னரே சொல்லிவிட்டு ஒரே நேரத்தில் ஓட விட்டு யார் முதலில் வருகிறார்கள் என்று கணிக்கவேண்டும். அதுபோல் நாட்டில் உள்ள எல்லா வேலைகளையும் விலாவரியாக, விரிவாக விவரித்து எழுத்தில் வடிக்க வேண்டும். பின்னர் அந்தந்த அதிகாரிகள், அரசியல்வாதிகள் தங்கள் கடமைகளை எந்த விதத்தில் செய்திருக்கிறார்கள் என்பதைக் கணிக்கலாம். அதுவரை மிகக் குறைந்த அளவே அதிகாரங்களைப் பயன்படுத்தி அவசியமான வற்றை மட்டும் அரசாங்கம் செய்து மற்றவற்றைத் தனியார் வசம் விட்டிருக்க வேண்டும் என்ற செயல் திட்டத்தை உச்சநீதி மன்றம் மூலம் உடனே அமல்படுத்தவேண்டும். கருப்புப்பணம் சேர்க்க வேண்டிய அவசியமில்லாமல் வரிவகுப்பு முறையை உடனே மாற்றியாக வேண்டும்.

பணக்காரர்கள் எல்லாம் ஒரு நாளைக்குப் பத்து முறையாக சாப்பிடுகிறார்கள்? உள்ள ஒரு வேளை உணவையும் ஒழுங்காகச் சாப்பிட முடியாத நிலையில் தான் பல பணக்காரர்கள் இருக்கிறார்கள். தொழிலதிபர்கள் முதல் போட்டு, துணிச்சலுடன் செயல்பட்டு, நாட்டின் உண்மையான செல்வத்தைப் பெருக்குகிறார்கள். பல பேருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துகிறார்கள். அவர்களுக்குத்தான் நாம் முதல் மரியாதை தரவேண்டும். நம் உழைப்பை அனுபவிக்கும் அரசியல் வாதிகளுக்கல்ல. தொழிலதிபர்களுக்கும் வழி காட்டும் மேலாண்மை வித்தகர்கள் (Management expert) நாமெல்லாம் மதித்துப் போற்றுதற்குரியவர்கள். அவர்களது திறமையால்தான் எந்த ஒரு செயலையும் செம்மையாகச் செய்ய முடியும். அவர்களையும் நாம் இனங்கண்டு மதித்துப் போற்றவேண்டும்.

புதுக்கருத்துக்களை, கண்டுபிடிப்புகளை, கருவிகளை உருவாக்கி உலகின் போக்கையே மாற்றும் விஞ்ஞானிகளை "கண்டு பிடிப்பாளர்களை" ஆராய்ச்சியாளர்களை நாம் கண்டு பிடித்து ஊக்கம் அளித்துப் போற்றவேண்டும்.. எந்த நாடு ஆராய்ச்சிக்கு (R & D) முக்கியத்துவம் கொடுக்கின்றதோ அந்த நாடு விரைவில் முன்னேறும். ஆதிகாலத்தில் இந்தியா, பின்னர் தொழிற்புரட்சியினால் இங்கிலாந்து, இப்போது அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், போன்ற நாடுகள் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தையும் ஆராய்ச்சியாளர்களின் முக்கியத்துவத்தையும் நமக்கு அடையாளம் காட்டுகின்றன. ஆனால் ஆராய்ச்சியாளர்களை அடையாளம் கண்டு கொள்வது எளிதல்ல. அவர்களை இனங்கண்டு ஊக்குவிப்பது நமது முதன்மையான பணி.

அதற்கு முன் நாம் என்னென்ன செய்து முடிக்கவேண்டும். எந்தக்காலக் கட்டத்துக்குள் செய்து முடிக்கவேண்டும். என்று தீர்மானித்து திட்டம் (TimeBoundAction Ilan) வகுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

அரசு செயல்களை அறுதியிட்டுக்கூற முடியாத நிலை இருக்கும் வரை குறைந்த அளவிலேயே அரசுப் பணிகள் வைத்து மற்றவற்றைத் தனியார்வசம் விட்டுவிட வேண்டும்.

இவையெல்லாவற்றையும் நாம் நிறைவேற்ற நமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆணிவேறாக இயங்கக்கூடிய நீதித்துறை. அதுதான் நமது நாட்டைத் தற்போது காப்பாற்றக் கூடிய விடிவெள்ளி. ஆனால் அங்கே நம் நீதிபதிகளுக்கு நாம் அளிக்கும் சம்பளம் அவமானகரமாக இருக்கிறது. மற்ற துறைகள் எல்லாம் பெரிய அதிகாரிகளுக்கு ரூ 500/- ரூ 1000/- என்று சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்த காலத்தில் நீதிபதிகள் சம்பளம் ரூ 3500/- என்று வைத்தார்கள். அவர்களுக்கு எந்தக் குறையும் இருக்கக்கூடாது என்பது அடிப்படை. ஆனால்

திரைக்கலைஞர்பிரசாந்த்;சேலம்:இராசமாணிக்கம்திருச்சி:ஜான்ராஜ்தேவர்: டாக்டர் சாந்தி மதுரை: இரா. இரவி:சு.இலக்குமணசுவாமி
புதுச்சேரி:ச.வேல்முருகன் கல்கத்தா: பி.சத்யநாராயணன்; டெல்லி:சுந்தரேசன்,ரவிராமானுசம்,கதிர்,சம்பத்குமார் கேரளா:சிவமணி
ச.வெள்ளிங்கிரி; டாக்டர்.லோகாம்பாள் சுந்தரம்,கைதராபாத்: என்.ஆர்.இலட்சுமணன்; பெங்களூர்:இராப.முரளி,பாவலர்.த.தமிழ்மறவன்

இன்று அவர்கள் சம்பளத்தையும், அரசுத்துறை அதிகாரிகள், ஆசிரியர்கள், தனியார்துறை அதிகாரிகள் சம்பளத்தையும் ஒட்டி நோக்கினால் நீதிபதிகள் பரிதாபகரமான நிலையில் இருப்பது தெரியும். இது எந்த விதத்திலும் நியாயமல்ல. நீதிபதிகள் ஆயுள் பரியந்தம், நல்ல முறையில் வீடு, வாகனம், போன்ற வசதிகளோடு, குழந்தைகள் சரியான முறையில் பராமரிக்கும் வசதிகளோடு வாழ நாம் உடனடியாக அவர்கள் சம்பளத்தைப் பல மடங்கு உயர்த்தியாக வேண்டும். இது அவசியமும் அவசரமுமான பணி. அவர்கள் என்றும் தேவைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

அப்படி நாம் கணிக்கும் சம்பளம் பண வீக்கத்தினால் மதிப்புக் குறையாமல் அதற்குரிய ஏற்பாடும் செய்யப்படவேண்டும். இது நீதிபதிகளின் வேண்டுகோள் அல்ல. நமது, பொது மக்களின், நாட்டின் மீது பற்றிக் கொண்டவர்களின் வேண்டுகோள்.

நிரந்தரமானதாக இல்லாமல் திடீர் யோகம் போல் வரும் திரையுலக நட்சத்திரங்களின் வருமானத்தை அவர்களது ஆயுள், மற்றும் அவர்கள் குழந்தைகளின் காப்பிற்கான வருமானமாகக் கணிக்க வேண்டும். உதாரணமாக ஒரு நடிகரின் (30 வயது) ஒரு வருட வருமானம் உண்மையாக 30 லட்சம் என்று வைத்துக் கொள்வோம். இது என்றும் நிரந்தரமல்ல. அதை அவர் ஆயுள் 75 வயது அவர் குடும்பப்பராமரிப்பு 15 ஆண்டுகள் (அவர் ஆயுளுக்குப்பின்பு) என்று கணக்கிட்டு 75-30 =45 +15 =60 ஆண்டுகள் அல்லது 60 × 12 =720. மாத வருமானமாகக் கொள்ளவேண்டும். அதற்கேற்ப வருமானவரி விதிக்கவேண்டும். அதுவரை அந்தப் பணம் அரசாங்கப் பத்திரங்களிலோ, வங்கி வைப்பு நிதிகளிலோ அல்லது நிலம் வீடுகளிலோ முதலீடு செய்யப்படவேண்டும். ஆக அடுத்து வரக்கூடிய தேர்தலில் அமையும் அரசு அதிக பட்ச அதிகாரங்களை எடுத்துக் கொள்ளாது ஒரு காபந்து அரசாக இயங்க வேண்டும். அதற்கு நல்ல நியாயமான நேர்மையானவர்களையே மக்கள் இனங் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். மேலாண்மை வித்தகர்களையே, அறவழி நடப்பவர்களையே தேர்ந்தெடுக்கவேண்டும். நாடே, மதம், மொழி, இனம், சாதி எல்லாவற்றையும் விட முக்கியமானது என்று கருதுபவர்களை இனங்கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும்.

இப்போது உள்ள கட்சிகள் எல்லாவற்றையும் காணாமற் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம் என்பது உறுதி.

நபர்களும் கட்சிகளும் எந்த அளவு முக்கியம் என்று பார்க்காமல் என்னென்ன சாதிப்பதாகச் சொல்லி என்ன சாதித்தன என்று பார்க்க வேண்டும்.

அரசு எவ்வளவு செலவு செய்தது, என்ன அறுவடை செய்தது என்று பார்க்கும் பக்குவம் பெற வேண்டும். அதற்கு நம் வாக்காளர்களைத் தயார் செய்யவேண்டும்.

ஒருவர் முதலில் ஒரு கீழ்நிலை அதிகாரியாகச் சேர்ந்து, படிப்படியாக முன்னேறி அதிக பொறுப்புள்ள மேல் நிலைப் பதவிகளை அடைவது வழக்கம். ஒவ்வொரு நிலையிலும் இட்ட பணியை எப்படிச் செய்கிறார் என்று மதிப்பீடு செய்கிறோம். அதன் பின்னரே பதவி உயர்வு அளிப்போம். ஆனால் அதைவிட ஆயிரம் பங்கு அதிகாரம் உள்ள அரசியல் பதவிகளை, எந்தவித உத்திரவாதமும் நிரூபணமும் இல்லாதவர்களுக்கு கொடுத்து விட்டு அவர்கள் எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்று கணித்துப்பார்க்கக் கூட அறிவு இல்லாதவர்களாக இருக்கிறோமே? சும்மா அவர்களைக் குறை கூறிக் கொண்டு மறுபடியும் அதே கட்சி, சாதி, பணச்சேற்றில் விழுந்து தேர்தலை ஒரு கேலிக்கூத்து ஆக்குகிறோமே நம்மை விட அறிவு சூன்யங்கள் யார்?


ஆகவே முதலில் நாடு தழுவிய முறையில் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தி அதில் வென்றவர்கள் செயல்படும் திறத்தை உன்னிப்பாய்க் கவனித்துக் கண்காணித்து, மதிப்பெண் அளித்து அவர்களை அடுத்த நிலையில் உள்ள பதவிகளுக்குத் தேர்தலில் நிற்க அனுமதிக்கும் முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்புறம் அந்த நிலையில் பணியாற்றும் திறமையை, நேர்மையைக் கணித்து அதற்கும் மேலே உள்ள அரசியல் பதவிகளுக்குத் தேர்தலில் நிற்க அனுமதிக்க வேண்டும். ஆகவே இந்தக் கணிப்புமுறை ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றவாறு அறிமுகப்படுத்தப்பட்டு, சீர்தூக்கிப் பார்த்துச் செம்மைப்படுத்தப் பட்டு உபயோகத்தில் கொண்டு வரப்படவேண்டும் என்பதே நாம் இப்போது உடனடியாகச் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான பணி. அது வரைக்கும் தேர்தல் வேண்டாம். அப்படித்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் :பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
பன்னாட்டு,தமிழ்எழுத்தாளர்,கல்லூரி,பொதுநூலகங்கள் ,அரசியல்கட்சிகள்,சங்கங்கள்,பத்திரிகைகட்கு இலவசசந்தா உண்டு.

தேர்தல் வந்தாலும் அதில் கட்சிகள் வேண்டாம். அப்படிக் கட்சிகள் வந்தாலும் அதில் நேர்மையானவர்களைத் தவிர வேறெவரும் வேண்டாம் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். ஆக நமக்கு இப்போது உடனடித் தேவை நல்ல நேர்மையான திறமைசாலிகளை அடையாளம் காணும் பக்குவம்.

□ □ □



தஞ்சை பெரியகோவில்



## உறங்காத உணர்வுகள்

அ. மனோகரன்

'எடுத்தேன் அரிவாளை. ஒரே வீச்சு. தலை தனியே போய் விழுந்துச்சு' என்றான் அந்த சிறைக் கைதி. மெல்லிய அந்த தேகத்துக்குள் இப்படி ஒரு மிருக பலம் வந்ததற்குக் காரணம் ஒன்றும் இருந்தது. நாம் காரணத்தை ஆராய வேண்டிய அவசியம் இப்போது இல்லை. ஒரு விநாடியில் கையில் கிடைத்த ஆயுதத்தால் கோபம், கண்ணை மறைக்க வெட்டினான் என்பது தான் உண்மை. அவன் வீரத்தில் கட்ட பொம்மனோ, பலத்தில் பீமனோ இல்லை - கோபத்தில் அறிவிழந்தான், ஆத்திரத்தில் செயல் பட்டான் என்பதை நாட்கள் கடந்தபின் தற்போது உணர்கிறான் - வருந்துகிறான்.

மேலே நடந்தது ஏதோ கதைக்கான முன்னுரை என்று எண்ண வேண்டாம். முன்பு நீதிபதியாய் இருந்த என் தந்தையின் உதவியுடன் ஒரு சிறைச்சாலையைப் பார்த்த போது கேட்டறிந்த உண்மை.

உண்மையைச் சொல்லப் போனால் அங்குள்ள கைதிகள் அனைவரும் தங்களை வில்லனாகவோ அல்லது கதாநாயகனாகவோ எண்ணிப் பெருமை கொள்ளவில்லை. செய்த முரட்டுத்தனத்திற்கு வருந்துவதோடு இனிச் செய்யக் கூடாது என்ற வைராக்கியத்தையும் கொண்டிருந்தார்கள்.

ஆக, ஓர் உண்மையைக் கண்டு கொண்டேன். உணர்வு வயப்படும்போது அறிவு வேலை செய்யவில்லை. உணர்ச்சி மனிதனை ஆள்கிறது. மனிதனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு போகிறது. ஆட்டிப் படைக்கிறது. ஆட வைக்கிறது.

அறிவோடு சிந்திப்பவன் எச்சரிக்கையோடு செயல்படுகிறான். செயலில் விவேகம் வருகிறது. உணர்வுக்கு - உணர்ச்சிக்கு இடம் குறைவு தான். நகைச்சுவை, அவலம், இரக்கம், அச்சம், பெருமை, கோபம், மகிழ்ச்சி, அருவெறுப்பு என எட்டுவகை உணர்வுக்கு ஆட்படுகிறான் மனிதன் என்றார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்காப்பியன். இவ்வெட்டு உணர்ச்சியும் இல்லாத 'சாந்த' நிலையையும் சேர்த்து உணர்வுகள் ஒன்பது (நவரசம்) என்றார் வடமொழி அறிஞர்.



ரஷ்யா /மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்,கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்:0230478452:த.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்:எஸ்.அருள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து பதியுங்கள்!
உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !

மனிதன் இந்த உணர்ச்சிகளில் ஏதேனும் ஒன்றில் எப்போதும் சிக்கித் தவிப்பதால் உயர்வோ தாழ்வோ மகிழ்ச்சியோ துயரமோ அடைகிறான் என்பது இப்போது நமக்குப் புரிகிற தல்லவா? நாம் என்னவோ சாதாரண – சராசரி மனிதர்கள். இந்த உணர்ச்சிப் புயலில் சிக்கிய பெரும் தலைகளைப் பற்றி அறிய, நாம் சற்று இலக்கிய ஏடுகளைப் புரட்டுவோமா?

தசரதன் வேட்டைக்குச் செல்லுகையில் யானை, நீர் அருந்துவதாக எண்ணி சுரபாணம் ஒன்றை தன் வில்லில் இருந்து செலுத்தினான். அங்கே மாண்டதோ ஒரு இளைஞன். தசரதன் தன் வில்லின் திறமை மீது கொண்ட தற்பெருமை, உணர்வு வயப்பட்டதால் அல்லவா? தன் மகன் அம்பு பட்டு மாண்டது அறிந்து சோக வயப்பட்டு, விழி இழந்த பெற்றோர், அம்பு எய்தவன் மன்னன் என்றும் அறியாது 'மகனை இழந்த சோகத்தை' நீயும் உணர்வாய்' எனச் சாபமிட்டது சோகத்தால் வந்த ஆத்திரத்தால் அல்லவா?

ஒப்புயர்வற்ற இராமனைத் தன் மகனாய்க் கருதி வந்த கைகேயியை அரைமணி நேர 'மூளைச் சலவையால்' கூனி வென்று விட்டாளே? பரதன் மேல் கொண்ட பாசம் கைகேயியின் அறிவை மறைத்ததே? மனிதன் வண்ணம் மாறும் மாயம் அன்றே தொடங்கி விட்டது.

கிட்கிந்தையில் தன்னைப் போல் சுக்கிரீவனும் மனைவியை இழந்துள்ளான் என்று அறிந்ததும் இராமன், 'உன் சுற்றம் என் சுற்றம்' என்றதோடு நில்லாமல், 'உன் பகை என் பகை' என்று உணர்வு வயப்பட்டு சொல்லப் போக, பலம் மிகுந்த வாலியை மறைந்து நின்று கொன்ற பெரும் பழிக்கு ஆளானதும் உணர்வு வயப் பட்டதால் அல்லவா?

'மணமானவன் என்றாலும் பரவாயில்லை, என்னையும் ஏற்றுக்கொள்' என்று முன்பின் முகவரி தெரியாத இராமனிடம் அழகு ஒன்றிலேயே உணர்வு வயப்பட்டு சூர்ப்பனகை பிதற்ற, இராமன், 'இலக்குவனைப் போய்ப் பார்' என்று எள்ளி நகையாட, 'சரி! நீயாவது வா!' என்று தரத்திலே தாழ்ந்து போனாள் சூர்ப்பனகை. 'போய்த் தொலை!' என்று இலக்குவனாவது விரட்டியிருக்கப்படாதோ? அவள் மூக்கை அறிந்து அவமானப்படுத்தப் போக, சூர்ப்பனகை 'நான் அவமானப் பட்டேன்!' என்பதை அடக்கி வாசித்து விட்டு, 'பேரழகி ஒருத்தி உனக்கு வேண்டாமா?' என்று இராவணனுக்குத் தூபம் போட்டது உளவியல் கலையில் கைதேர்ந்தவள் என்றல்லவா நமக்குக் காட்டுகிறது. மேற்சொன்ன 'பஞ்சவடி'க் காட்சிகள் அனைத்தும் பல்வேறு உணர்ச்சி வெளிப்பாடுகளின் அரங்கேற்றம் அல்லவா? இராமாயணக் கதை, 90° இல், கோணம் மாறிப் போனது இந்தக் காட்சிக்குப் பிறகுதானே.

'கேட்டதும் காதல் – பார்த்ததும் காதல்' என்ற சிறுபிள்ளைத்தனமான உணர்வுக்கு ஆளாகிப்போன இராவணனோ, தன் பெரும் நற்குணங்களிலிருந்து அதல பாதாளத்திற்குக் காம வயப்பட்டு தன் பெருமை, இனம், சுற்றம் அனைத்தும் இழந்தான்.

ஆக, உணர்ச்சிப் போராட்டங்களின் கூட்டுக் காட்சிகள் தான் இராமாயணமே. இங்கே கதை திசை மாறும் போதெல்லாம் கதா பாத்திரங்கள் நவரசத்தில் ஏதேனும் ஒன்றின் வயப்படுவதால்தான் என்றாகிறது. உணர்ச்சி மோதல்கள், உரையாடல்கள், காட்சிகள் இலக்கியச் சுவைக்கு வேண்டுமானால் மெருகேற்றலாம். **உண்மை வாழ்க்கையில் உணர்ச்சி மிகுதி அவலத்தில்தான் போய் முடிகிறது.** மேலதிகாரியுடன் காரசார விவாதம், உறவுக்காரர்களிடம் காட்டுகிற கோபம், அடுத்த வீட்டுக்காரரிடம் சண்டை, நண்பனிடம் அளவுக்கு மீறிய நகைச்சுவை கேலியில் முடிந்த விபரீதம், மணமானவன் மற்றொருத்தியுடன் கொண்ட எல்லை மீறிய நட்பு, கண்மண் தெரியாமல் தண்டிக்கப்பட்ட குழந்தை, சில்லறைக் காசுக்காக வியாபாரியுடன் மோதல் – இப்படி நடைமுறை வாழ்க்கையில் எல்லையை மீறுகிற உணர்ச்சிப் பெருக்கு நமக்கு விபரீதத்தைத் தருவது தவிர மறக்கமுடியா வடுவாகவும் நெஞ்சில் குடி கொள்கிறது.

நாணயத்தின் இரு பக்கமாகச் செயல்படும் 'உணர்ச்சி– அறிவு' இரண்டையும் சரியான வீதத்தில் கலந்து அளவோடு வாழத் தெரிந்தவரை 'அறிஞர்' என்று இவ்வுலகம் போற்றுகிறது.

'நாக்கிலே சனி', என்றும், 'ஆத்திரக்காரனுக் குப் புத்தி மட்டு', 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு', 'நிறைகுடம் ததும்பாது', 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' – என்ற முன்னோர் சொல்லிலே ஆழ்ந்த அனுபவமும் பொருளும் இருக்கத்தான் செய்கிறது.

☐ ☐ ☐



டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்: கைதையூரான் குமாரகுருபரன் :சுகந்தி தில்லையம்பலம்
யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; கருவாஞ்சிக்குடி: வி.காந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர் இலக்க நிலையம்
/யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும்.
தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை),புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு

## வானொலியில் தமிழ்நிகழ்ச்சி நடத்தும் சீனப்பெண்!

சீனா என்றதும் நம்கண்முன் விரிவது சீனப்பெருஞ்சுவரும்,கம்யூனிசமும் தான்! ரஷ்யா போன்று இதுவும் இரும்புத்திரை போட்டுக்கொண்டநாடு!உலகிலேயே நாகரீகமும்,கல்வியும்,கலையும் முதலில் தோன்றியது இங்கு தான் என்பர்,சிலர்!அத்தகைய பழம்பெருமை வாய்ந்த நாட்டில்,பழமைவாய்ந்த நம்தமிழ்மொழிக்கும்,அரியணை கொடுத்து அழகுபார்க்கிறார்கள்,என்றால் அது நமக்குப்பெருமைதான்!

சீனவானொலியில் தமிழிசை ஒலித்ததை இந்தியா-சீனா யுத்தத்தின்போது முதன்முதலில் நாம் கேட்டோம். தமிழர்களின் பண்பாட்டிற்கும்,சீனமக்களின் பண்பாட்டிற்கும் முதல்மரியாதை செய்யும் இந்தப்பணியை சீனவானொலியின் தமிழ்ப்பிரிவு கங்கைநதி-மஞ்சள்நதி இணைப்பாக, இந்திய-சீனநட்புறவை வளர்ப்பதாகஉள்ளது. இங்கு தமிழ்ப்பிரிவின் தலைவராக இருப்பவர்,45வயதான ஜீஜீவான் குவா அல்லது கலையரசி எனும் சீனப்பெண்மணி! இவர்தான் சீனநாட்டில் தமிழ்மொழிக்கு எல்லாமாக இருந்து தனது தமிழ்த்தொண்டை செய்துவருகிறார்.அவர்களுடன் ஒரு சந்திப்பு இதோ:

கேள்வி:தமிழ்மொழியை கற்றுக்கொள்ளும் ஆர்வம் தங்களுக்கு எப்படி வந்தது?
பதில்:சீனாவில் உள்ள வெளிநாட்டு மொழிக்கல்லூரியில் நான் ஆங்கிலமொழியை படித்துப்பட்டம் பெற்றபின் சீனவானொலியில் பணிபுரியத்தொடங்கினேன்.அப்பொழுது தமிழ்மொழியைக்கற்கும்படி சீனஅரசு என்னைக்கேட்டுக்கொண்டது.அதன்பிறகுதான் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளத்தொடங்கினேன்.
கே:யார் மூலமாக நீங்கள் தமிழ்கற்றுக்கொண்டீர்கள்?
ப:சீனாவில் அந்நியமொழிவெளியீட்டகதுறையில் இலங்கையைச்சேர்ந்த ராணி எனும் பெண் வேலைபார்த்து வந்தார்.அவரது கணவர் சின்னத்தம்பி!அவர்கள் வாயிலாக நான் தமிழ்மொழியை கற்றுக்கொண்டேன்.அப்போது என்னுடன் இணைந்து 4 பேர் தமிழ்மொழியை பயின்றனர்.
கே.தமிழைப்படிக்க எவ்வளவு நாட்கள் ஆனது?
ப: சுமார் 1 ஆண்டு ஆனது. 1975ல் தமிழ்மொழியை கற்றுக்கொண்டேன்.15ஆண்டுகள் கழிந்தபின்.1990-91ல் நான் தமிழ்நாடு வந்து,தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் தெளிவாக தமிழ் கற்றுக்கொண்டேன்.அப்போது பல்கலைக்கழகம் சிறப்புசான்றிதழ் ஒன்றையும் வழங்கியது!
கே:தமிழைக்கற்றுக்கொண்ட அனுபவம் எப்படி இருந்தது?
ப:முதலில் படிக்கும்போது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது.சரியாக உச்சரிக்க முடியவில்லை.ஆங்கிலத்தைப்போல் எளிதாக இல்லை.தொடர்ந்து கற்றுவந்தபோது எனக்கு தமிழ்மொழி இனிமையாக மாறத்தொடங்கியது.முதலில் எழுதுவதற்கு பயிற்சி எடுத்துக்கொண்ட நான்,பேசுவதற்கு முயற்சி எடுக்கவில்லை.ஏனெனில் நான் கொச்சைத்தமிழில் தமிழைப்பேசி பாழடிக்கவிரும்பவில்லை. சரியாக,முழுமையாகத்தெரிந்தபின் தான் நான் பேசத்தொடங்கினேன்.ஆனால் உங்களைப்போல எங்களால் பேசமுடியாதுதான்!
கே:தமிழ்மொழிக்கும்,சீனமொழிக்கும் இடையே நீங்கள் காணும் வேறுபாடுதான் என்ன?
ப:சீனமொழியும்,தமிழ்மொழியும் பண்டைக்காலம் தொட்டு இருந்துவரும் தொன்மைவாய்ந்தமொழிகள் ஆகும். தமிழைப்படிப்பது மிகவும் கடினம்! சீனமொழியைப்போலன்றி தமிழ் இலக்கணம் மிகவும் கடினமாகவுள்ளது.
கே: சீனவானொலியில் தமிழ்அலைவரிசை எத்தனை ஆண்டுகளாக ஒலிபரப்பப்படுகிறது.?
ப:1963 முதல் தமிழ்அலைவரிசை செயல்பட்டுவருகிறது. ஏறத்தாழ 33ஆண்டுகள் கடந்துவிட்டன.
கே:இந்தத்துறையில் எத்தனை ஆண்டுகளாகப்பணிபுரிந்துவருகிறீர்கள்?
ப:சீனவானொலியில் நான் 22 ஆண்டுகளாகப் பணிபுரிந்துவருகிறேன்.
கே:தங்கள் ஒலிபரப்பில் எந்தமொழி அலைவரிசைக்கு நேயர்களிடம் அதிக வரவேற்பு உண்டு?
ப:தமிழ்மொழி அலைவரிசைக்குதான் அதிகவரவேற்பு உண்டு.அதிகஅளவில் நம்மை வந்தடையும் தமிழ்நேயர் கடிதங்கள் தான் எங்களை உற்சாகம் ஊட்டுகின்றன.
கே:மற்ற மொழி அலைவரிசைகள் ஒலிபரப்பப்படுகின்றனவா?
ப:இந்தி,உருது,வங்காளம் ஆகியமொழிகளிலும் ஒலிபரப்பு செய்யப்படுகிறது.தென்னிந்தியாவில் தமிழ்மொழியை மட்டுமே தெரிவுசெய்து ஒலிபரப்புகிறோம். தற்பொழுது 9பேர் பணிபுரிகின்றனர்.4பேருக்கு தமிழ்மொழி கற்றுக்கொடுக்கப்படுகிறது
கே:தமிழ் அலைவரிசை எந்தெந்த நாடுகட்கு ஒலிபரப்பாகிறது?
ப: இலங்கை,இந்தியா,சிங்கப்பூர்,மலேசியா,யப்பான்,சவூதிஅரேபியா,அமெரிக்கா,ஜேர்மனி உள்ளிட்ட தமிழர்வாழ்நாடுகள் முழுவதும் ஒலிபரப்பு செய்கிறோம்.
கே.தங்களது இந்த சுற்றுப்பயணத்தின் நோக்கம் என்ன?
ப:இருஆண்டுகட்கு ஒருமுறை இங்குவருகிறோம்.கடிதமூலம் சந்தித்த தமிழ்நேயர்களை நேரில்சந்திக்கவந்துள்ளோம்.அனைத்திந்திய வானொலிநேயர்மன்றத்தின் சார்பில் தமிழ்நாட்டில் நடத்தப்படும்,கருத்தரங்குகளில் கலந்துகொள்ள வந்துள்ளோம்.இருநாட்டு கலாசார,பண்பாட்டு உறவுகளையும்,நட்புறவுகளையும் ஏற்படுத்துவதுதான் எங்கள் பயணத்தின் நோக்கம்!

இவ்வாறு பேட்டியளித்த கலையரசியின் கணவர் பெயர்,ஜீவாங் ஏஞ்சிங்இவர் சீனநாட்டு மத்தியவானொலியில் துணைஇயக்குனராக பணிபுரிந்துவருகிறார்.இவர்கட்கு 15 வயதில் குவாங்டன் என ஒரு மகள் உள்ளார். சீனவானொலியின் தமிழ்நிகழ்ச்சிகள்:இந்தியநேரப்படி தினமும் இரவு 7.30-8.00 வரையிலும், 8.00-8.30இலங்கை நிகழ்ச்சியும், சிற்றலை 25மீ,11575 கி.கேர்ட்ஸ்,மற்றும் 31மீ.,9455 கி.கே. அலைஎண்ணிலும் கேட்டுமகிழலாம்!
நன்றி:தினத்தந்தி தகவல்:புதுச்சேரி வேல்முருகன் முகவரி:China Radio Intl.,Tamil Dept.,Bejing-100866,China



திருகோணமலை:மதுமாரி ,தாமரைத்தீவான்கண்டி: எஸ் .மயில்வேந்தன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை; குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்: கவிற்சலாந்த்:மமனோகரன் அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா:பத்மா ஞானப்பிரகாசம் தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி பிஜி:ச.சச்சிதானந்தம் தென் ஆபிரிக்கா:செல்வன்பிள்ளை

www.tamilarangam.net

சர்வதேசதமிழரில்,வரும் கதைகளின் சம்பவங்கள்,பெயர்கள் யாவும் கற்பனையே! வாசகர்கடிதங்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!

## கேட்டீர்களா சேதி........!

1.நோர்வே பாராளுமன்றதேர்தலில் தொழிற்கட்சி:65இடம் (903536வாக்கு-35வீதம்) காளி காகனின்,முற்போக்குகட்சி:25இடம்(395078-15.3வீதம்),வலதுசாரி:23(370168-14.3வீதம்),கிறிஸ்தவ ம.கட்சி:25(352548-13.7வீதம்),மத்திய கட்சி:11(204417-7.9வீதம்),சோசலிசஇடதுசாரி: 9(155198-6வீதம்),இடதுசாரி:6(115133-4.5வீதம்) செந்தேர்தல்அணி:0(43260-1.7வீதம்)பிற:1இடம் (42434வாக்கு-1.6வீதம்) மொத்தம்:165பிரதிநிதிகள்!மார்கட்மீடியா,நடத்தியகருத்துக்கணிப்பே தேர்தல்முடிவுடன் அதிகம் ஒத்திருந்ததாம்.

வெளிநாட்டார் தம் வாக்குகளை தொழிற்கட்சிக்கே அளித்தனர்! என அவதானிகள் கருதுகின்றனர்.காளி காகன்(பி.தேதி:6.5.1944) மறுகட்சிகளின்ஆதரவின்மையால்,பிரதமராகலாம்!என்ற அச்சம்அகன்று,செல்மங்னபுன்னவிக் (கிறிஸ்தவ.ம.க.)வரலாம்!என நம்பப்படுகிறது. தூர்பியோண் யக்லாந்த்(5.11.1950) மீண்டும் பிரதமராக இடதுசாரிகட்சிகளின் ஆதரவுடன் வருவதே நாட்டுக்கும்,உலகுக்கும் நலம்!என கருதப்படுகிறது.

2.நோர்வே புள்ளிவிபரநிலைய தக்வல்களில் சில: 1-1-96ல் வெளிநாட்டுபிரசைகள்தொகை பின்வருமாறு: (பிரசாஉரிமைபெற்றோர் தனி) ஐரோப்பியர்:93189 பேர்,ஆபிரிக்கர்:10742,ஆசியர்:39497,வட,மத்தியஅமெரிக்கர்:10689,தென் அமெரிக்கர்:5137,ஓசியானியா:771,நாடற்றோர்: 772,நாடுதெரியாதோர்:40 இவர்களில் நாடுரீதியாக,சனத்தொகை: பின்லாந்த்:3724,பொஸ்னியர்:11225,போலந்த்:2399,ஆப்கானியர்:362,பங்ளாதேசி:326,இந்தியர்:2680,சீனா:1831,பாகிஸ்தான்:9705,இலங்கை:5127,வியட்நாம்:5863,சிலி: 3689 பேர் ஆவர்.

இலங்கையரில் 2744பேர் ஆண்கள்,2383பேர் பெண்கள் ஆவர்.இலங்கையரில் திருமணமாகாதோர்:0-15வயதுள்ளோர்:1152,15வயதுக்கு கூடியோர்:1459,திருமணமானோர்:2401,பிரிந்தோர்:32,விவாகரத்து:34,ஓரினவாழ்வு:2,தெரியா:47 இலங்கையர் தொகை மாவட்டரீதியாக:ஒஸ்போல்ட்:25,ஆகர்சுஸ்:139,ஒஸ்லோ:2114,கெட்மார்க்:4,ஒப்லாந்த்:38,புஸ்கருட்:70,வெஸ்போல்ட்:17,ரெலிமார்க்:16,கி.அக்டர்:9,மே.அக்டர்:36, றோகாலாந்த்,186,கோடாலாந்த்439,சோன்ஓபியுடன:343,மோறஓறொம்ஸ்டால்:550,தெ.துரண்டலாக்:253,வ.துரண்டலாக்:35,நூர்லாந்த்:225, துறம்ஸ்:112,பின்மார்க்:516

1994.1.1ல்,நோர்வேசனதொகை:4324815பேரில் வெளிநாட்டார்:211215பேர்(இலங்கையர்:6789) ஆவர்.1995.01.01ல் நோர்வே சனதொகை :4348410,வெளிநாட்டார்:219966 (இலங்கையர்: 7114) இக்காலப்பகுதியில் இலங்கையரின் பிறப்பு:227,இறப்பு:7,குடிவரவு:244,குடியகல்வு: 189 ஆகும்.

1994ல் 8800 வெளிநாட்டார் நோர்வேபிரசா உரிமை பெற்றனர்.

1994ல்,நடந்ததிருமணங்களில் 18849நோர்வே ஆண்கள்:16821 நோர்வேபெண்களையும்,513 ஐரோப்பியபெண்களையும்,485ஆசியபெண்களையும்,298நோடிக்,137வட,ம.அமெரிக்க,75ஆபிரிக்க,60 தெ.அமெரிக்க,7ஓசியானிய,93நாடற்ற பெண்களை மணந்தனர். 268ஆபிரிக்கஆண்கள்:153நோர்வேபெண்களையும்,84ஆபிரிக்க,1 ஐரோப்பிய,2நோடிக்,2ஆசிய,1வ.ம.அமெரிக்க, 25நாடற்றபெண்களை மணந்தனர்.

574ஆசியஆண்கள்:377ஆசியபெண்களையும், 118நோர்வேபெண்களையும்,57நாடற்ற,9ஐரோப்பிய,4நோடிக்,4ஆபிரிக்க,2வடஅமெரிக்க,3தெ.அமெரிக்கபெண்களையும் மணந்தனர்.

நோர்வேக்கு,இலங்கையரின் (99வீதமானோர் தமிழரே) குடிவரவு-குடியகல்வு பின்வருமாறு: 1976-80:42-19, 1981-85:207-34,1986-90:855-40, 1990:587-88, 1991:504-88,
1992:504-71, 1993:411-95, 1994:242-106
1.7.97ல்,நோர்வே-மொத்தசனதொகை:4404100

3.இந்தியாவில் வருடாந்தம்,30000 பெண்கள் கணவன்,மாமியாரால்அதிகசீதனம் கோரியும், புதுமணம்,சீதனம் கருதியும் எரிக்கப்படுவதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா ஆய்வு கூறுகிறது. ஆனால் ஐ.நா.ஆய்வு 5000 பேர் மட்டுமே இவ்வாறு எரிக்கப்படுவதாக கூறுகிறதாம்.

4.நோர்வேயில் மதுபாவிப்பு:1996ல்,வைன்7வீதத்தாலும்(33மிலியன்.லீற்றர்),பியர் 3.3வீதத்தாலும்(260மிலியன்.லீற்)அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரநிலைய ஆய்வு கூறுகிறது.நோர்வே அரசின் மதுக்கொள்கை,நாடுதழுவியரீதியில் பாவனையை 25வீதத்தால் குறைப்பதாகும். நோர்வேயில் தமிழர்களின் மதுபாவனையும் அதிகரிப்பதாகவே அவதானிகள் கருதுகின்றனர்.தமிழர் வாழ்நாடுகளும்,தமிழ்நாடும் கூட,இந்த,நோர்வேயின் குறைப்புக்கொள்கையை பின்பற்றலாமே!!செய்வீர்களா!!

5.பேர்கன் கதீட்ரல் கல்லூரியில்,22 உயர்தர பாடங்களில் அதிஉயர்புள்ளிகளை(6),சதிஷ் அரோரா எனும் இந்தியர் பெற்றுள்ளார்.

6.நோர்வே வர்த்தக தலைமை சம்மேளனம், நோர்வேதொழிற்சங்கம்,தொழில்வாய்ப்புபிரிவு ஆகியன சேர்ந்து தகைமைவாய்ந்த குடியேறியோர்க்கு 6மாத பயிற்சிநெறியை தொழில் துறைகளில் வழங்க புதியதிட்டம் வகுத்துள் ளன.சுமார் 220,000 வெளிநாட்டவரில்,80000 பேர் தம்,தகைமைக்கேற்ற தொழில்புரிவதாகவும்,மீதியுள்ளோர் பாகுபாடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதால் தான் இத்திட்டம்!

7.ஆண்களைவிட,பெண்களே படு பொய்யர்களாக இருப்பதாக ஒரு பத்திரிகைஆய்வு கூறுகிறது.பெண்களே,பெண்களின்பொய்களை கண்டுபிடிப்பதில்,வல்லவர்களாயுமுள்ளனராம்.



பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: வி.எஸ்.சிவகுமார் யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:கிருஷ்ணன் மலேசியா:க.மாணிக்கவாசகர்.க.கணேசன் அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திரசேகரன்: யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு:நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SARVADESA TAMILER (e.mail:nsp@sn.no) ISSN:0805-7443
சர்வதேச தமிழர்
C-BLAD
Editor/Publisher:N.S.Pirabu
L.Hervigs veien 69A,
3035 Drammen,Norway
Norges Tamiltidsskrift for informasjon,kunnskap,kultur og solidaritet! Tel./Fax.00.47.32.813416
Subscription:Scandinavia:90,-kr/yr ,Other countries:15,-USD; Postbanken a/c:05320899453
1997 Sept-Oct /Vol.4,Nr.7&8

## உலகஅன்னைக்கு அஞ்சலி!

அல்பானியாவில் பிறந்தாய்,
அற்பவாழ்வை உணர்ந்தாய்!
கல்லாமனிதர்க்கு உதவ
கண்டம் தாண்டி விரைந்தாய்!
கல்வியே உயர்வென சொன்னாய்
கத்தோலிக்கத்தை பயின்றாய்!
கடவுள்,மனிதசேவை என்றாய்
கல்கத்தாவில் உறைந்தாய்!
அட!மனிதா!எங்கே போறாய்?
அமைதி,சேவை வாழ்வென்றாய்!
படகுவாழ்க்கை வாழும்
பாவப்பட்டோர் வாழ்வுமாற
நடடா,முன்னே!என்றாய்!
நல்லமனமுள்ளோரை வென்றாய்!
நோபல் பரிசை வென்றாய்
நோயில் வீழ்ந்து மாண்டாய்!
பாவம்செய்தோம் திரேசாதாயே!-உன்
பணியைதொடர்வோர்வாழி! -**என்.எஸ்.பிரபு**



## உலகஅரசிக்கு அஞ்சலி!

மனித மனமொன்று அழிந்தது
உலகமெல்லாம் இன்று அழுதது
காலன் அவன் விதியா- இல்லை
கடவுள் செய்த சதியா இது?

இங்கிலாந்தின் இளவரசியே
எங்கள் அன்பு முழு மதியே
உலக மக்கள் அரசி நீயே
ஆதரவற்றோர் அன்புத் தாயே!

அரச வாழ்வு நீ மறுத்தாய்
புருஷனையும் நீ வெறுத்தாய்
அமைதி வாழ்வு தேடிச் சென்றாய்
மலைக் குகையில் நீ முடிந்தாய்!

அழகான உந்தன்மாளிகை-இன்று
அமைதியாகக் கிடக்கின்றதே
அங்கு நடமாடிட நீயில்லையே
காத்து அதுவும் நிற்கின்றதே!

வீதியோரம் செல்லும்போதும்- நாம்
காண்பதெல்லாம் உந்தன் முகம்
பத்திரிகைகளை புரட்டினாலும்
பார்ப்பதெல்லாம் உந்தன் செய்தி!

சுழலும் இந்தப் பூமியிலே-நீ
சுற்றி வராத இடங்களில்லை
நகரம் முதல் கிராமம் வரை உனை
அறிந்திடாத மாந்தரில்லை

உலகிலுள்ள குழந்தைக் கெல்லாம்
அன்புத் தாயாய் நீ திகழ்ந்தாயே
பலகோடி குழந்தைகள் இன்று
அன்னையை இழந்துதுடிக்கின்றன!

உலகினிலே அமைதி நிலைநாட்ட
உறுதியோடு நீ முயன்றாய் இன்று
எம்மையெல்லாம் அமைதியின்றி
தவிக்க விட்டு நீ மறைந்தாய்!

ஆறாத் துயரில் எம்மையெல்லாம்
ஆழ்த்திவிட்ட அன்புத் தாயேஇந்த
உலகம் மறையும் காலம் வரை
உன் நினைவு எம்மில் வாழுமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனை வேண்டுகிறேன்
மீண்டும் இந்த மண்ணில் நீங்கள்
பிறந்திடவும் வேண்டுகிறேன்!.................**பொன் .சிவா**

## ஓ! டயானா! அழகும்அறிவும்!

கண்ணிவெடியை ஒழிக்கநின்றாய்!
கை,கால்,கண்,காது இழந்தவரை,
கனிவாய் அணைத்து கதைசொன்னாய்!
மன்னர்,மதிமிகுஅறிஞர்கள்-மற்றும்
மக்கள்தொண்டர்கள் கூறியவை-கொடியார்
மனதுள் புகுந்திலையே!
கன்னம் சிவக்க ஒருசிரிப்பு
கடைவாய்குழிய நாணத்துடன்
கனிவாய் சொன்னாய்!கொடியவர்க்கு!
உந்தன் சொல்லை ஏற்ற பலர்
உள்ளம் குழைந்து மனமிரங்கி
உலகம் வியக்க மாறிட்டார்!
கண்ணிவெடியை நிறுத்து!என்றார்!
கடும் சட்டங்களை போடவந்தார்!
கடும் அவலம்தனை உணரவைத்தாய்!
கஞ்சப்பயல்கள் கைதிறந்து
காசு பணத்தை வழங்கிடவே
கனியும் சிரிப்பும் உதவியதே!
குட்டரோகம் கொண்டவரை
கூச்சமின்றி தொட்டாயே
குறையாதுன்புகழ் காண்பாயே!
எட்டி விலத்தி செல்லாமல்
எய்ட்சுநோயாளியை தொட்டாயே
இதுதான் உந்தன் பெருமையடி!
நெஞ்சம் நெகிழ வறியவரை
நேரில் கண்டாய் வீடற்றவரை,
நீ வாழி!வாழி! வாழியவே! ......**என்.எஸ்.பிரபு**

Cicero Grafisk AS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்